
மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

மாலை 23 15187



உரையாசிரியர்
ஆங்கீரஸ S வேங்கடேச சர்மா
சங்கரனடிமை

உ

விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே,

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

மாலை—23

உரையாசிரியர் :

சிவபக்திப்பிரசாரமணி,
சிவபுராண ஞானபூஜகர், சாஸ்த்ர பிரசார பூஷணம்,
சிவபுராணக் காவலர், சிவபுராணச் சக்கரவர்த்தி,

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

(சங்கரன் 'அடிமை)



பிரசுரம் :

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை - 600 033.

உரிமை பதிவு] 6-12-1990 [விலை ரூ 4-0

உ

சைவ சமயாசாரியர்

நால்வர் துதி



திருஞான சம்பந்தர் | திருநாவுக் கரசர் | சுந்தர மூர்த்திகள் | மாணிக்க வாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

திருஞானசம்பந்தர்



புகலிவந்த புண்ணியன்,
கவுணியர் குலக்கொழுந்து,
தமிழ்வேதம் தந்த தலைமகன்,
அருங்கலைச் சிறுமழ இளங்களிறு
நாளும் நல்லிசையால் நாடெங்கும்
நற்றமிழ் பரப்பிய
திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்



ஸமர்ப்பணம்

ஓம் உக்ராய நம:

சிவபிரானின் அருச்சனைக்குரிய சிவாஷ்டோத்தர சத நாமாவளி என்னும் 108 திருநாமங்களில் 23வது திருநாமம் உக்ர: (உக்கிரன்) என்பதாகும். இந்தத் திருநாமத்துக்கு "பகைவர்களிடம் கடுமையாக இருப்பவர்" என்பது பொருளாகும். வேதத்தில் கூறப்படும் பவாதி எட்டுத் திருநாமங்களுள் உக்ர: என்பதும் ஒன்றாகும். அன்றியும் திருவுருத்திரத்தில் கூறப்படும் திருநாமங்களிலும் ஒன்றாகும்.

இறைவரது பெருமையைப் புலப்படுத்தும் இந்த வேத விதிதமாகிய ஓம் உக்ராய நம: என்ற 23வது திருமந்திரத்தினால் அருச்சனைசெய்து இந்த 23வது ஞானத்தமிழ்மாலையை இறைவரது திருவடிகளில் ஸமர்ப்பிக்கும் சிவபுண்ணியப் பேற்றினை அடைகின்றேன்.

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

உரையாசிரியர்.

சிவம்.

5-2

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

உரையாசிரியர் பணிவுரை

திருச்சிற்றம்பலம்

பெறுவது நிச்சயம் அஞ்சல்நெஞ் சேபிர மாபுரத்து
மறுவறு பொற்கழல் ஞானசம் பந்தனை வாழ்த்துதலால்
வெறியுறு கொன்றை மறியுறு செங்கை விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி எம்பெருமானமர் பொன்னுலகே.

திருச்சிற்றம்பலம்

—ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, 42.

''நெஞ்சமே! நீ அஞ்சாதே, பிரமாபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானை வாழ்த்துதலால் மணம்மிக்க கொன்றை மாலையும், மானைப்பிடித்த ஒரு கரத்தையுடையவரும் விடைக் கொடியும் உடையவருமான எம்பெருமான் அமர்ந்த பொன்னுலகாகிய சிவலோகத்தை அடைவது நிச்சயம்'' என்பது மேற்காட்டிய திருப்பாடலின் பொருளாகும். இவ்வாறு நம்பியாண்டார் நம்பிகள் கூறியபடி நாம் திருஞான சம்பந்தப் பெருமானின் திருப்பதிகங்களுக்கு உரை காணுதல் என்ற முறையில் அப்பெருமானை வழிபட்டு வருகிறோம்.

இவ்வழிபாட்டு முறையில் இதுவரை 22 தமிழ் மாலைகள் வெளியிட்டுள்ளோம். இப்பொழுது வெளியிடப்படும் 23வது தமிழ் மாலையில் திருஞானசம்பந்த சுவாமிகள் தமது ஐந்தாவது தலயாத்திரையில் தொடர்ந்து தரிசித்துப்பாடிய திருத்

தலங்களில் திருமாந்துறை, திருப்பாச்சிலாச்சிராமம், திருப்பைஞ்ஞீலி, திருஈங்கோய்மலை, திருக்கொடிமாடச் செங்குன்றூர், திருநணா, ஆகிய ஆறு தலங்களின் திருப்பதிகங்களை வழக்கம்போல, பதிகவரலாறு, பொழிப்புரை, விளக்கவுரை, தலவரலாறு இவற்றோடு கொடுத்துள்ளோம், தலவரலாறுகளை அவ்வப்பதிகத்தின் உரைப்பகுதியுடனேயே கொடுத்தல் நலமென்று சில அறிஞர்கள் கூறினமையின் அவ்வாறே பதிப்பித்துள்ளோம்.

இதுவரையில் உதவியது போலவே இந்த மாலைக்கும் அரிய விளக்கக் குறிப்புகள் தந்து உதவியவர் இராணிப்பேட்டைப் புலவர், நக்கீரன் வழியடிமை திரு. பி. மா. சோமசுந்தரனார் ஆவர். திருவருள் கூட்டிவைக்க நமக்கு அறிமுகமான கோவை அறிஞர் திரு. சி. சு. கண்ணாயிரம் அவர்களும் அரிய குறிப்புகள் கொடுத்து உதவினார்கள். இவ்விரு பெருமக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூரில் வசிக்கும் சிவத்திரு. சிவதாஸ லக்ஷ்மணன் ஐயர் என்னும் சிவநேயரது பொருளுதவியால் இந்த 23வது தமிழ்மாலை வெளிவருகிறது. இப்பெரியார் தில்லை நடராஜப்பெருமானிடம் அளவில்லாத பக்தியுடையவர். அதன் விளைவாக ஸ்ரீ சம்பு நடனம் என்ற ஸ்ரீ நடேசாஷ்டகம் என்ற தோத்திர நூலை வெளியிடவும் பொருளுதவி செய்துள்ளார்கள். இப்பெரியார் நீடூழி வாழ்ந்து மேலும் மேலும் சிவபுண்ணியத்தையீட்டத்தக்க பெருஞ்செல்வம் பெற அம்மையப்பர் அருள் புரிவாராக.

மிக எளியோமாகிய எம்மையும் இவ்வரிய பணியில் ஈடுபடுத்திய திருவருளை வியந்து போற்றுகிறோம். எல்லாம் எமையாளும் ஈசன் செயல்.

சிவம்,

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்



மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை—23

திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள்

(தொடர்ச்சி)

திருமாந்துறை

பதிகவரலாறு:—திருஅன்பிலாலந்துறையில் எழுந்தருளியுள்ள முன்னவனைத் தொழுதுபோற்றிப் பதம்நிறை செந்தமிழ் பாடிச் சடைமுடியார் பயில் பலபதியும் பணிந்துபாடித் திருமாந்துறை அணைந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார், அங்குத் திகழும் துறைநதி வாழ் சென்னியார் தம் முன்றில் பணிந்து அணிநெடு மாளிகை உள்புக்குத் தாழ்ந்தெழுந்து, துன்னு கதிர்ப் பரிதி மருத்துக்கள் தொழுது வழிபாடு செய்த நிலையைச் சிறப்பித்துப் பாடிய நிறைதமிழின் சொன்மாலை இத்திருப்பதிகமாகும்.

பண்-நட்டராகம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

செம்பொ ஞர்தரு வேங்கையும் ஞாழலுஞ்
 செருந்திசெண் பகம்ஆனைக்
கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை
 குருந்தலர் பரந்துந்தி
அம்பொன் நேர்வரு காவிரி வடகரை
 மாந்துறை உறைகின்ற
எம்பி ரானிமை யோர்தொழு பைங்கழல்
 ஏத்துதல் செய்வோமே. 1

பதிகப்பொழிப்புரை:—1. செம்பொன்னையொத்த நிறம் வாய்ந்த மலர்களைத் தரும் வேங்கை, குங்குமம், செருந்தி, சண்பகமாகிய மரங்களும், யானையின் தந்தங்களும், சந்தனக் கட்டைகளும், மாதவி, சுரபுன்னை, குருந்தம் ஆகியவற்றின் மலர்களும் பரந்து, அவற்றை அடித்துக்கொண்டு அழகிய பொன்னையொத்த நிறத்துடன் வருகின்ற காவிரிநதியின் வடகரையிலுள்ள திருமாந்துறை என்னுமித்தலத்தில் உறைகின்றவரும், தேவர்கள் தொழுகின்ற எம்பிரானுகியவருமான சிவபிரானது அழகிய திருவடிகளைத் துதிப்போம்.

'மாந்துறை உறைகின்ற எம்பிரான் பைங்கழல்' என்றும் 'இமையோர் தொழும் எம்பிரான் பைங்கழல்' என்றும் இருவகையாகக் கூட்டிப் பொருள் கொள்க.

விளவு தேனொடு சாதியின் பலங்களும்
 வேய்மணி நிரந்துந்தி
அளவி நீர்வரு காவிரி வடகரை
 மாந்துறை உறைவானைத்
துளவ மான்மக னைங்கணைக் காமனைச்
 சுடவிழித் தவனெற்றி
அளக வாணுதல் அரிவைதன் பங்கனை
 றறியோமே.

2. விளாமரத்தின் தேனோடு, சாதிக்காய் மரங்களின் பழங்களையும், மூங்கிலின் முத்துக்களையும் வரிசையாக அடித்துக்கொண்டு பெருக்கெடுத்து தண்ணீர் வருகின்ற காவிரிநதியின் வடகரையில் உள்ள திருமாந்துறை என்னுமித் தலத்தில் உறைபவரும், துளசிமாலையை அணிந்த அத்திரு மாலின் மகனான ஐந்து மலர்க்கணைகளையுடைய மன்மதனைச் சுட்டெரிக்குமாறு நெற்றிக்கண்ணை விழித்தவரும், கூந் தலோடு ஒளியுடைய நெற்றியையுடைய உமாதேவியாரைத் தனது இடதுபாகத்திலே உடையவருமாகிய சிவபிரானைத் தவிர வேறு ஒரு தெய்வத்தை நாம் அறியோம். (இப்பாட லின் ஈற்றடி எப்பொழுதும் நம்மனோர்களின் கவனத்திலிருக்க வேண்டும்).

ஐங்கணை—மன்மதனின் ஐந்து மலர்க்கணைகள். இவை தாமரை, மா, முல்லை, அசோகு, குவளை மலர்களாகும்.

கோடு தேன்சொரி குன்றிடைப் பூகமுங்
கூந்தலின் குலைவாரி
ஓடு நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைநம்பன்
வாடி னார்தலை யிற்பலி கொள்பவன்
வானவர் மகிழ்ந்தேத்தும்
கேடி லாமணி யைத்தொழல் அல்லது
கெழுமுதல் அறியோமே. 3

3. தேனைச்சொரிகின்ற மரங்களையுடைய குன்றுகளின் இடையே புகுந்து பாக்கு, கூந்தற்பனை ஆகியவற்றின் குலை களை வாரிக்கொண்டு ஓடி வருகின்ற நீர்ப்பெருக்கினையுடைய காவிரியாற்றின் வடகரையிலுள்ள திருமாந்துறை என்னுமித் தலத்தில் உறையும் நம்பனும், பிரமதேவனது தலையாகிய கலத்தில் பலிகொள்பவனும், தேவர்கள் மகிழ்ந்து வழிபடும் கேடிலாமணியுமான சிவபிரானைத் தொழுதலையன்றி வேறு நிறைவான செயலை நாம் அறியோம்.

நம்பன்—உயிர்களின் விருப்பத்துக்கு உரியவன். வாடினார் தலை—இறந்தவரது தலையோடு, இங்கு பிரமகபாலம். கேடிலா மணி—என்றும் அழிவே இல்லாத மணியாகிய சிவபிரான். கெழுமுதல்—நிறைவு, பொருத்தம்.

இலவ ஞாழலும் ஈஞ்சொடு சுரபுன்னை
    இளமரு திலவங்கம்
கலவி நீர்வரு காவிரி வடகரை
    மாந்துறை உறைகண்டன்
அலைகொள் வார்புனல் அம்புலி மத்தமும்
    ஆடர வுடன்வைத்த
மலையை வானவர் கொழுந்தினை யல்லது
    வணங்குதல் அறியோமே. 4

4. இலவம், குங்குமமரம், ஈந்துமரம், சுரபுன்னை, மருது, மற்றும் இலவங்கம் முதலியவற்றுடன் கலந்து வருகின்ற நீர்ப் பெருக்கையுடைய காவிரியாற்றின் வடகரையிலுள்ள திருமாந் துறை என்னும் இத்தலத்தில் உறையும் தலைவனும், அலை யுடன் கூடிய கங்கை, பிறைச்சந்திரன், ஊமத்தைமலர் இவற்றோடு ஆடுகின்ற பாம்பினையும் தலையில் வைத்த மலை போன்றவனும், தேவர்களால் மிகவும் உயர்ந்தவனாகக் கொண்டாடப்படுபவனுமாகிய சிவபிரானையல்லது வேறு ஒரு கடவுளை வணங்குதலையறியோம். (வணங்கமாட்டோம் என்று கூறியருளியதாம்).

ஈஞ்சு — ஈந்து. ஈச்சமரம் என்று வழங்கப்படுவது கண்டன்—தலைவன், அரசன்; இங்கு இறைவனைக் குறித்தது. மலை—மலை போன்று உயர்ந்தவன், தனது நிலையினின்றும் திரியாதவன். இறைவரது உயர்வு, பெருமை, வலிமை முதலியவற்றுக்கு யாதொரு உவமையும் இல்லையெனினும் மக்களுக்கு ஏதேனும் ஒரு வகையால் உணர்த்தும் பொருட்டு மலை என்றும் கூறியருளியதாகக் கொள்க. திருவாசகத்திலும் ''ஆராத இன்பம் அருளும் மலை போற்றி'' (சிவபுராணம்—17)

என்றும் ''அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே'' (திருப்பள்ளியெழுச்சி—2) என்று இறைவரை மலை என மாணிக்கவாசகர் கூறியிருத்தலையும் இங்குக் கொள்க.

கொழுந்து—மரத்தின் உச்சியில் புதியதாகத் துளிர்க்கும் தளிர். இங்கு 'வானவர் கொழுந்து' என்பது வானவர்களால் உச்சியில் வைத்துப் போற்றப்படுபவன் என்பதாம்.

கோங்கு செண்பகங் குருந்தொடு பாதிரி
குரவிடை மலருந்தி
ஓங்கி நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை உறைவானைப்
பாங்கி னாலிடுந் தூபமுந் தீபமும்
பாட்டவி மலர்சேர்த்தித்
தாங்கு வாரவர் நாமங்கள் நாவினில்
தலைப்படுந் தவத்தோரே. 5

5. கோங்கு, செண்பகம், குருந்து இவற்றோடு குரவு பாதிரி மலர்களையும் தள்ளிக்கொண்டு ஓங்கிப் பெருக்கெடுத்துவரும் நீரையுடைய காவிரியாற்றின் வடகரையில் திருமாந்துறை என்னுமித்தலத்தில் உறையும் சிவபிரானை விதிமுறைப்படி தூபம், தீபம், தோத்திரம், நிவேதனம், மலர் தூவி வழிபடுதல் இவற்றோடு அவரது திருநாமங்களைத் தங்களது நாவினில் எப்பொழுதும் தாங்குபவர்கள் தவம் தலைப்படுதலை உடையவராவர்.

பாங்கு—ஒழுங்கு, ஈண்டு 'விதி முறை' என்ற பொருளைத் தரும். 'விதி' என்பது சிவபூஜா விதிகளாகும். பாட்டு—தோத்திரம். அவி—நிவேதனம்.

நாமங்கள் நாவினில் தாங்குதல்—இறைவரது திருநாமங்களை எப்பொழுதும் உச்சரித்தல், ஜபம் செய்தல். இவை ஸஹஸ்ரநாமம் எனப்படும் ஆயிரம் நாமங்கள், அஷ்டோத்தர சதம் எனப்படும் நூற்றெட்டு நாமங்கள் மற்றும் இவை போல்வனவாம்,

தலைப்படுதல்—உண்டாகுதல், சேர்தல்; சிவபூஜையும், சிவநாமம் உச்சரித்தலுமே பெரிய தவம் என்று இத்திருப் பாடல் உணர்த்தியது கண்டு உய்வோமாக,

பெருகு சந்தனங் காரகில் பீலியும்
பெருமரம் நிமிர்ந்துந்திப்
பொருது காவிரி வடகரை மாந்துறைப்
புனிதனெம் பெருமானைப்
பரிவி னாலிருந் திரவியும் மதியமும்
பார்மன்னர் பணிந்தேத்த
மருத வானவர் வழிபடு மலரடி
வணங்குதல் செய்வோமே. 6

6. பெருமளவில் சந்தனம், கரிய அகில், மயிற்பீலிகள், இவைகளுடன் மற்ற பெரிய மரங்களையும் வரிசையாக அடித்துத் தள்ளி (கரைகளை) மோதிக் கொண்டு வரும் காவிரி நதியின் வடகரையில் உள்ள திருமாந்துறை என்னும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள புனிதனாகிய எம்பெருமானை, அன்போடு சூரியன், சந்திரன், மற்றும் நிலவுலகத்து மன்னர்கள் பணிந்து துதிக்க, மருதவானவர்கள் வழிபாடு செய்த அப்பெருமானது மலரடிகளை வணங்குவோம்.

பரிவு—அன்பு, பக்தி; மருதவானவர்—காற்று வடிவாய் இயங்கும் வானவர்கள். இவர்கள் சப்த (ஏழு) மருத்துக்கள் எனப்படுவர். இவ்வேழு மருத்துக்களும், ஒவ்வொருவரிட மிருந்தும் ஏழுமருத்துக்களும் உண்டாக, மொத்தம் 49 என்ற எண்ணிக்கையுடையவர்கள் என்று கூறப்படுகிறது. இவர்களை மருத்கணங்கள் எனவும் வடமொழி நூல்கள் வழங்கும்.

நறவ மல்லிகை முல்லையும் மௌவலும்
நாண்மல ரவைவாரி
இறவில் வந்தெறி காவிரி வடகரை
மாந்துறை இறையன்றங்(கு)

அறவ னாகிய கூற்றினைச் சாடிய
அந்தணன் வரைவில்லால்
நிறைய வாங்கி வலித்தெயி லெய்தவன்
நிரைகழல் பணிவோமே. 7

7. மணம் பொருந்திய மல்லிகை, முல்லை, மௌவல் என்னும் காட்டுமல்லிகை முதலிய புதிய மலர்களை வாரிக் கொண்டு வந்து கரையில் எறியும் காவிரிநதியின் வடகரையில் உள்ள திருமாந்துறையில் எழுந்தருளியுள்ள இறைவனும், நடுநிலைதவருத தருமராசன் எனப்படும் இயமனைக் கொன்ற அந்தணனும், மலையாகிய வில்லால் நன்கு வளைத்து (அம்பை) வலித்து மும்மதில்கள் எரியும்படி எய்தவனுமாகிய சிவ பிரானது ஒழுங்காக அமைந்த திருவடிகளைப் பணிவோம்.

இறவு—மிகுதி என்ற பொருளும் உளது. அறவன்—நடு நிலை தவருது உயிர்களை அவைகளின் காலம் முடியும்போது கொண்டு செல்லுதலின் இயமன் அறவன் எனப்பட்டான். சாடுதல்—அழித்தல், கொல்லுதல.

மந்த மார்பொழில் மாங்கனி மாந்திட
மந்திகள் மாணிக்கம்
உந்தி நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை உறைவானை
நிந்தி யாயெடுத் தார்த்தவல் லரக்கனை
நெரித்திடு விரலானைச்
சிந்தி யாமனத் தாரவர் சேர்வது
தீநெறி யதுதானே. 8

8. தென்றற்காற்று வந்து பொருந்தும் பொழில்களில் மாங்கனிகளை குரங்குகள் உண்ண மாணிக்கக்கற்களை உந்திக் கொண்டு வரும் காவிரிநதியின் வடகரைத்தலமான திருமாந் துறையில் உறையும் இறைவரும், கயிலைமலையை நிந்தித்துப் பெயர்த்தெடுக்க ஆரவாரஞ்செய்த கொடிய இராவணனை நசுக்கிய திருவிரலையுடையவருமாகிய சிவபிரானைச் சிந்திக் காத மனமுடையவர்கள் சென்றடைவது தீநெறியேயாகும்.

ஆர்த்தல்—ஆரவாரித்தல்; நெறித்திடு திருவிரலான்—ஒரு திருவிரலால் நெரித்திட்டவன் என்றும் பொருள் கொள்ளலாம். தீ நெறி—கொடிய நரகில் செலுத்தும் தீயநெறி. 'திருவீழிமிழலையானைச் சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே' என்ற அப்பரடிகளின் திருவாக்கையும் இங்குக் கருதுக.

நீல மாமணி நித்திலத் தொத்தொடு
நிரைமலர் நிரந்துந்தி
ஆலி யாவரு காவிரி வடகரை
மாந்துறை அமர்வானை
மாலு நான்முகன் தேடியுங் காண்கிலா
மலரடி யிணைநாளும்
கோல மேத்திநின் றாடுமின் பாடுமின்
கூற்றுவன் நலியானே. 9

9. அழகிய நீலமணிகள், முத்துக்களின் கொத்துக்கள் இவற்றோடு வரிசையாக மலர்களையும் சேர்த்து அடித்துக் கொண்டு பேரொலியுடன் வரும் காவிரி நதியின் வடகரையிலுள்ள திருமாந்துறை என்னுமித்தலத்தை விரும்பி எழுந்தருளியுள்ள சிவபிரானைத் திருமாலும் நான்முகனும் தேடியும் காணாத அத்திருக்கோலத்தைக் துதித்து அப்பெருமானது இரண்டு மலர்போலும் திருவடிகளைப் பாடியும் ஆடியும் நாள் தோறும் வணங்குவீராக. (அங்ஙனம் வணங்குதிரேல்) கூற்றுவன் உங்களை வருத்தமாட்டான். (வணங்காதவரைக் கூற்றுவன் வருத்துவான் என்பதாம்).

நின்று ணுஞ்சமண் தேரரும் நிலையிலர்
நெடுங்கழை நறவேலம்
நன்று மாங்கனி கதலியின் பலங்களும்
நாணலின் நுரைவாரி
ஒன்றி நேர்வரு காவிரி வடகரை
மாந்துறை ஒருகாலம்
அன்றி யுள்ளழிந் தெழும்பரி சழகிது
அதுவவர்க் கிடமாமே. 10

10. நின்று கொண்டு உணவு கொள்ளும் சமணர்களும், தேரர் எனப்படும் பௌத்தர்களும் நிலையான கொள்கை உடையவரல்லர் (எனவே அவர் உரைகளைக் கேளன்மின்). நீண்ட மூங்கில்கள், நறுமணமுள்ள ஏலக்காய், நல்ல மாங்கனிகள், வாழைப்பழங்கள், நாணலின் தொகுதிகள் இவைகளை ஒன்றாக வாரி அடித்துக் கொண்டு ஓடிவரும் காவிரியின் வட கரையிலுள்ள திருமாந்துறை இறைவரை உன்னுதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் என்று வைத்துக் கொள்ளாமல் எப்பொழுதும் நினைந்து உள்ளம் அழிந்து தோன்றும் தன்மை பெரிதும் சிறப்புடையதாகும். இங்ஙனம் உள்ளழிந்து நிற்கும் நிலையே எம்பெருமானார் உறையுமிடமாகும். (எனவே அந்த நிலையை அடைய முயற்சி செய்க என உலகத்தவர்க்கு அறிவித்தருளினார் ஆசாரியர் என்று கொள்க).

உள்ளழிந்தெழும் பரிசு—அல்லும் பகலும் இடைவிடாது தாயைப்பிரிந்த சேய்போல இறைவனை நினைந்து கதறிக்கூவி அழுதல் வேண்டும். இந்நிலை ஓங்க மனம் அழிகின்ற நிலை தோன்றும். இதையே மனோநாசம் என்று பெரியோர் கூறுவர். ஆயின் மனம் அழியும் நிலையை அடைதல் எளிதன்று. அதன் அருமையை,

"சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

—பராபரக்கண்ணி! 169.

என்று தாயுமானவ சுவாமிகள் குறிப்பிடுகின்றார்கள். இந்நிலையை அடைந்தால் விழிப்பும் துயிலுமில்லாத, உணர்ச்சி மட்டும் இருக்கச் செயல்படமுடியாத தன்மை உண்டாகும். கண், மூக்கு, செவி, வாய், மனம் இவை கட்டுப்பட்டு அடங்கி விடுகின்றன. இதுவே "உள்ளழிந்து எழும் பரிசு" ஆகும். இந்த நிலையில் இறைவனின் காட்சியை அவனருளால் பெறலாம்.

''அன்பேயென் அன்பேயென்று அன்பால் அழுதரற்றி
அன்பேயன் பாக அறிவழியும்—அன்பன்றி''

என வரும் திருக்களிற்றுப்படியார் (55) பாடற் பகுதியும் ஈண்டு கருதற்குரியது.

அது அவர்க்கிடமாம்—'அது' என்பது மேற்கூறிய உள்ளழிந்து எழும் பரிசைச் சுட்டிக் காட்டுகிறது. அந்த நிலையில் இறைவர் காட்சியளித்தலால் அஃதே அவர்க்கு இடமாம் எனக் கூறியருளியதாகக் கொள்க.

வரைவ ளங்கவர் காவிரி வடகரை
மாந்துறை உறைவானைச்
சிரபு ரம்பதி யுடையவன் கவுணியன்
செழுமறை நிறைநாவன்
அரவெ னும்பணி வல்லவன் ஞானசம்
பந்தனன் புறுமாலை
பரவி டுந்தொழில் வல்லவர் அல்லலும்
பாவமும் இலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

11. மலையின் வளங்களைக் கவர்ந்துகொண்டு வரும் காவிரியின் வடகரைத்தலமான திருமாந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை, திருச்சிரபுரம் என்னுமொரு பெயரையுடைய சீகாழியைத்தனது பதியாகக் கொண்டவனும், கவுணியர் குலத்திலே உதித்தவனும், செழுமையான வேதங்கள் நிறைந்த நாவினையுடையவனும், 'அர அர' என்று எப்பொழுதும் உச்சரிக்கும் பணியில் வல்லவனுமாகிய திருஞானசம்பந்தனது அன்பு பொருந்திய இத்தமிழ்மாலை கொண்டு, பரவிடும் தொழிலில் வல்லவர் துன்பமும் அதற்குக்காரணமான பாவமும் இல்லாதவர் ஆவர்.

வரை வளம்—முன் பாடல்களில் கூறிய சந்தனம், அகில், இலவம், ஞாழல், ஈந்து முதலிய மரங்களும் மற்றவைகளு

மாகும். மறை நிறை நாவன் – வேதங்கள் நிறைந்த நாவினை யுடையவர். அதாவது வேதங்களனைத்தையும் அறிந்தும் ஓதியும் வருபவர்.

'அர' வெனும் பணிவல்லவன்—தான் 'அர' நாம முழக்கம் செய்தலோடு மற்றவரையும் அப்பணியில் உய்த்தலில் வல்லவர் என்பதாம்.

தலவரலாறு:—காவிரி வடகரையில் 58வது தலம். இத் தலத்தில் சூரியன், சந்திரன், மருத்துக்கள், மிருகண்டு முனிவர், கண்ணுவ முனிவர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றதாகத் தலவரலாறு கூறுகிறது. "பரிவினால் இருந்து இரவியும் மதியும் பார்மன்னர் பணிந்தேத்த மருதவானவர் வழிபடும் மலரடி வணங்குதல் செய்வோமே" என்று இத் தலப்பதிகத்தில் 6வது திருப்பாடலில் திருஞானசம்பந்த சுவாமிகளும் இவ்வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆம்பிரவனம் (மாமரங்கள் உள்ளகாடு) என்ற ஒரு பெயரும் இத்தலத்துக்கு உள்ளது. திருஞானசம்பந்த நாயனார் பதிகம் ஒன்று மட்டுமே இத்தலத்துக்கு உள்ளது, திருச்சியிலிருந்து லால்குடிக்குச் செல்லும பாதையில் திருச்சிக்கு வடகிழக்கே சுமார் 14 கிலோமீட்டர் தொலை விலும், லால்குடி ரயில் நிலையத்துக்கு மேற்கே சுமார் 5 கிலோமீட்டர் தொலைவிலும் இத்தலம் உள்ளது. பேருந்து களும், நகரப் பேருந்துகளும் (Town Bus) இத்தலம் வழியே செல்கின்றன.

இறைவர் திருப்பெயர்—ஆம்பிரவனநாதர்; இறைவியார் திருப்பெயர் - அழகம்மை; தீர்த்தம் - காயத்திரி தீர்த்தம்; தலவிருட்சம் - மாமரம்.

சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

திருப்பாச்சிலாச்சிராமம்

பதிகவரலாறு:—திருவடகரை மாந்துறையில் இறைவரை வணங்கிப் பதிகம்பாடித் துதித்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் அங்கு நின்றும் நீங்கிப் பிறதலங்களையும் அடைந்து வணங்கிக்கொண்டு திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் பதிக்கு எழுந்தருளினார்கள். இந்தத் தலம் கொல்லிமழவன் என்பவனால் ஆளப்பட்டு வந்தது. அவ்வரசனுக்கு அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். அவளை முயலகன் என்னும் ஒரு கொடிய நோய் பற்றி வருத்தியது. அப்பெண்ணின் துன்பத்தைக் கண்டு கொல்லிமழவனும் அவன் சுற்றத்தாரும் பெரிதும் வருந்தினர். எவ்வழியினாலும் தீர்க்க முடியாதவனாய்க் கொல்லிமழவன், சிவபெருமானையே வணங்கும் சைவமரபினனாகையினால், அக்கன்னிகையை அவளது துன்பம் இறைவரது திருவருளாலேயே நீங்கவேண்டுமென்று திருக்கோயிலுள்ளே கொண்டுபோய் இறைவர் திருமுன்பு இட்டு வைத்தான்.

அப்பொழுது திருஞானசம்பந்தப் பெருமான் அப்பதியினுக்கு அணிமையில் எழுந்தருளி வருவதைத் திருச்சின்னங்களின் ஒலியினால் அறிந்தான். உடனே தன்மகளை அங்கேயே விட்டு விட்டு, விரைவுடன் சென்று நகரத்தை நன்கு அலங்கரிக்குமாறு கட்டளையிட்டுத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமுன்பு தொழுது கொண்டே சென்றான். அன்பின் பெருக்கால் ஆனந்தக் கண்ணீர் பெருக முத்துச்சிவிகையின் முன் வீழ்ந்தபொழுது, வள்ளலார் அவனை 'எழுக' எனப் பணித்தருளினார். அவனும் தொழுதகையுடன் எழுந்திருக்க, அவனுடன் பிள்ளையார் திருக்கோயிலினுள் சென்றருளினார்.

திருக்கோயிலை வலங்கொண்டு இறைவரை வணங்க வந்தபொழுது அங்கு ஓரிளம்பெண் உணர்விழந்து நிலத்தில்

கிடப்பதைக் கண்டு ''இஃது என்னை?'' எனப் பிள்ளையார் வினவியருள, மழவன் அவரை வணங்கித் தனது மகளின் வரலாற்றை விண்ணப்பித்தான். அதனைக் கேட்ட பிள்ளையார் அருள் கூர்ந்து, திருப்பாச்சிலாச்சிராமம் மேய பரம் பொருளைப் பரவி அக்கன்னியின் நோய் நீங்கும் பொருட்டுத் 'துணி வளர் திங்கள்' எனத் தொடங்கும் இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார். பன்னு தமிழ்மறை பாடித் திருக் கடைக்காப்புச்சாத்தி, மன்னும் கவுணியர் கோமான் கண்ணுதற் பெருமானைப் போற்றி நிற்க, மழவன் மகள் நீங்காதபிணி நீங்கப் பெற்றுக் கதுமென எழுந்து தன் தந்தையின் அருகே சென்றாள். கொல்லி மழவன் பெரு மகிழ்ச்சியோடு பிள்ளையார் திருவடிகளில் தானும் தன் மகளுமாய் விழுந்து வணங்கினான். திருஞானப்பிள்ளையாரும் சிவபெருமானின் திருவடிகளில் ஒன்றுபட்ட உள்ளத்தோடு பணிந்தார். திருத்தொண்டர்கள் சிவநாம கோஷத்துடன் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

முயலகன் என்பது மிக்க கொடிய நோய். அபஸ்மாரம் என்றும் வழங்கப்படுகிறது. இந்நோய் உணர்வற்றுக் கிடக்கவும் வலிப்புடன் கிடக்கவும், பிறவாறு நலிவுற்றுக் கிடக்கவும் செய்யவல்லது. நடராஜப்பெருமானின் காலின் கீழ் அழுத்திவைக்கப் பட்டிருக்கும் அரக்கன் முயலகனே யாகும். இத்தலத்தில் நடராஜர் திருவடியின் கீழிருந்த முயலகனுக்குப் பதில் ஒரு பெரும் பாம்பு உள்ளது. முயலகன் பெருமானின் அருகில் நின்று வணங்கும் கோலமும் காணப் படுகிறது. சேக்கிழார் சுவாமிகள் இத்திருப்பதிகத்தை ''தணிவில் பிணிதீர்க்கும் பதிகத் தண்டமிழ்'' எனக்குறிப் பிட்டுள்ளார்கள் இவ்வருள்மொழிக்கேற்ப, இப்பதிகத்தை பக்தியுடன் ஓதுபவர்கள் இன்றும் பிணிதீர்ந்து நலம்பெற்று வருகிறார்கள். நாமும் இத்திருப்பதிகத்தை நாளும் ஓதி லம் பெறுவோமாக.

பண்-தக்கராகம்] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 1

பதிகப்பொழிப்புரை:—1. வளரும் ஒளியுடைய சந்திரன் பிரகாசத்துடன் விளங்கச் சுடர்விடும் சடையைச் சுற்றி முடித்தும், பாம்புகள் தங்குதலையுடைய திருக்கரங்கள் உடையவராயும், பூதகணங்கள் புடைசூழ எவரிடமும் சென்று பிச்சையெடுப்பவராயும், மற்றும் அழகிய கோலமெலாஞ் செய்துகொண்டு திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளி யிருக்கும் மணிகண்டப்பெருமானே இந்த மங்கை வாடும்படி மயல் செய்வது? இஃதோ இவர் பெருமை? (பெருமையன்று என்பது கருத்து).

துணிவளர் திங்கள்—வளர் துணி திங்கள் என்று மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது. துணி-ஒளி; இச்சொல் 'ஒளி' யென்று பொருள் தருதலைப் பிங்கல நிகண்டில் காண்க. ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் துணி யென்னும் சொல்லை ஒளி என்ற பொருளில் தமது திருப்பா, பரமபதி என்ற பாடற்பகுதியில் 2வது திருப்பாடலில் "......இருள் வலி துணி இலங்கு படிகத்தில் ஒளிர்தல்" என்ற இடத்தில் கையாண்டுள்ளதும் இங்குக் கருதற்குரியது. (இருள் வலி = சூரியன்; துணி - ஒளி). இவ்வாறின்றி துணி-துணிக்கப்பட்ட கீறு எனப் பொருள்கொண்டு பிறையைக் குறிப்பது எனவும் கொள்ளலாம்.

துளங்குதல்—பிரகாசித்தல், ஒளிவிடுதல். துளங்குதல் என்பதற்கு அசைதல், நிலைகலங்கி வருந்துதல் எனப்பொருள்

கொண்டு அதற்கேற்ப, "துணிபட்டுத் துளங்கிப் பின் வளர வரம்பெற்று விளங்கி" என்பது கோவைச் சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களது உரைக் குறிப்பு.

சுடர்ச்சடை—மின்னூர் செஞ்சடை. பாரிடம்-பூதகணங்கள்.

அணிவளர் கோலமெலாஞ்செய்து—இறைவனூர் அழகிய கோலங்கொண்டு திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளி யுள்ளார் என்பதாம். இறைவனூர் திருக்கோலம் கொள்ளும் சிறப்பினை திருக்கயிலாய உலா போன்ற உலா நூல்களில் காண்க. இவ்வாறின்றி "அணிவளர் கோலமெலாஞ்செய்து மங்கையை வாட" என்று கூட்டி அப்பெண்ணுக்கு அழகிய உடலும் கருவி கரணங்களும் தருதல்" என்பது சிவக்கவி மணியவர்களின் உரைக்குறிப்பு.

மணிகண்டர்—தலத்து இறைவர்திருப்பெயர். நீலமணி போன்று விளங்கும் விஷத்தையுடைய கழுத்தையுடையவர் "விடத்தால் வாடிய மயக்கம் நீக்கிய மணிகண்டரோ இம்மங்கை வாட மயல் செய்வது? இது மாறன்றே? மாண்பன்று; ஓ காரமிரண்டும் ஐயம். மாண்பே-இதில் உள்ள ஏகாரம் எதிர் மறை. (சிவக்கவிமணியவர்களின் குறிப்புரை யைத் தழுவியது).

மயல்—மயக்கம். முயலகன் என்னும் கொடியபிணியினூல் பீடிக்கப்பட்டு உணர்வின்றிக் கிடந்த நிலையைக்குறிப்பது. "மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே" என வினவுமுகத்தால் பெருமையுடைய பிரானூருக்கு இது மாண்பன்று என்று விண்ணப்பித்ததாம். பின் வரும் பாடல் களிலும் ஈற்றடிக்கு இவ்வாறே கொள்க.

கலைபுனைமானுரி தோலுடையாடை
கனல்சுட ராலிவர் கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் ளிவரென்ன

அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ ஏழையைவாட
இடர்செய்வதோ இவரீடே. 2

2. மானின் உரித்த தோலை மேலாடையாகக் கொண்டவர். மற்றும் புலி - யானை இவற்றின் தோலை இடையில் உடுத்த ஆடையாகவும் உடையவர். சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடர்களே இவரது கண்கள். தலை மாலையையணிந்த தலையையுடையவர். மாலையணிந்த திரு மார்பினையுடையவர். இத்தகைய இவரே நமது கடவுள் என்று அனைவரும் போற்றிப்புகழ அலைவீசும் புனலும் அழகிய பொழில்களும் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்ற மூவிலைச் சூலத்தினையுடைய இப்பெருமானோ இப்பெண்ணை வாடும்படி இடர் செய்வது? இஃதோ இவரது பெருமை ?

மானுரி - மான்தோல்; கலை - மேலாடை; தோல் - மான் உரி என்று தனியாகக் கூறியதால் தோல் என்பதற்கு யானை, புலி இவற்றின் தோல் எனப் பொருள்கொள்ளப்பட்டது. மானுரி கலை என்று மேலாடையைக் கூறியதால் உடையாடை என்பதற்கு இடையில் உடுத்திய ஆடை என்றும் கொள்ளப் பட்டது. கனல் சுடர் - கனலும் இரு சுடர்களும். தலையணி சென்னியர் - "தலைக்குத் தலைமாலை அணிந்ததென்னே" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு (7ம் திருமுறை திருவஞ்சைக்களத் திருப்பதிகம்). இவ்வாறின்றி, தாருக வனத்து இருடியர் ஆபிசார வேள்வியினின்றும் தோற்றுவித்து ஏவிய நகுதலையைத் தரித்த சென்னியர் என்றும் கொள்ளலாம்.

ஏழை - பெண்; அபலா என்பது வடமொழி. ஈடு - உயர்வு, பெருமை.

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை
வேண்டுவர் பூண்பதுவெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச்
சிதைசெய்வதோ இவர்சீரே. 3

3. உலகெலாந் துஞ்சும் மஹாப் பிரளய காலத்து இருளில் திருக்கரத்தில் அனலேந்தி ஆடுதலை விரும்புபவர். அவர் பூண்பது வெண்ணிறம் வாய்ந்த முப்புரி நூல். நஞ்சு சேர்ந்த திருக்கண்டத்தையுடையவர். நமது நெஞ்சத்தையே தமக்குரிய இருப்பிடமாக நம்மை விரும்பி வந்தடைவர்' மேகங்கள் தவழ்கின்ற உயர்ந்த மாளிகைகள் சூழ்ந்த திருப் பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருப்பவரும் செஞ்சுடர் போலும் வண்ணமுடையவருமான இறைவரோ பசியவளையல் களையணிந்த இப்பெண்வாடும்படி துன்பம் செய்வது? ஈதோ இவரது புகழ்?

வெஞ்சுடர் ஆடுவர் வேண்டுவர்—ஆடுவர் என்பதை வினை யெச்சமாகக் கொண்டு பொருள் கொள்ளப்பட்டது. கண்டனன் பணிந்தான் என்பது போல (கண்டு பணிந்தான் என்பது பொருள்).

நெஞ்சிடமாக நம்மை நயந்து நண்ணுவர்—தாமே வலிய வந்து அடியார்களை ஆட்கொண்டு அவர்களது உள்ளத்தைக் கோயிலாகக் கொள்வர். சேய் தாயை நோக்கி ஓரடி வைத்து முன்னேறும் முன், தாய் சேயை நோக்கிப் பத்தடி ஓடிச் சென்று சேயை அணைத்துக் கொள்வது போல எனக்கொள்க. "தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான் வார் கழல் பாடி......" என்ற திருவாசகம், திருவெம்பாவை, 6-வது பாடற்பகுதியும் இங்கு கருதற்குரியது,

சிதை செய்தல்—சிதைத்தல் என்னும் சொல் அழித்தல், கெடுத்தல் என்பன போன்ற பொருள்களைத் தரும். இங்கு இடம் நோக்கி வருத்துதல் என்று பொருள் கொள்ளப்பட்டது. இவ்வாறின்றி சிதை என்பது ஈமவிறகு என்றும் பொருள் படலால் அதுபோன்று துன்பத்தைத் தருதல் என்ற பொருளுங் கொள்ளலாம்.

கனமலர்க்கொன்றை அலங்கலிலங்கக்
கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிராமத் துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 4

4. கொன்றமாலை விளங்க, அக்கினி தேவனிடம் பிறந்த தூய பிறைச் சந்திரனைத் தலைமாலை போல அணிந்து, மேலும் நந்தவனங்களில் மலரும் பல்வேறு மலர் மாலைகளையுமணிந்து அழகாக விளங்கும் புனிதர் இவர் என்று கூறும்படி, அழகு மிகுந்த பொழில்கள் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்றவரும், அடியார்களின் எண்ணத்துள் நிறைந்தவருமான வலிமையுடைய இப்பெருமானே மங்கை வாடும்படி மயல் செய்வது? இஃதோ இவரது மாண்பு?

கனமலர்க் கொன்றை—கனம் என்ற சொல் மேகம் எனப் பொருள் தருதலால் மேகம் நிறைந்த கார்காலத்தில் மலரும் கொன்றை எனக் கொள்க.

கனல் தரு தூமதி - நெருப்பு (அக்கினி) தந்த தூயமதி என்பதாம். சந்திரன் ஒவ்வொரு சமயம் ஒவ்வோரிடத்தினின்று தோன்றியதாகக் கூறப்படுகிறது. உதாரணமாக அத்திரிமுனிவரின் விழியினின்று தோன்றியதாகவும், பாற்கடலில் அமுதம் கடையும்போது தோன்றிய பொருட்களுடன்

தோன்றியதாகவும் புராணங்கள் கூறுகின்றன. இவ்வாறே ஒரு சமயம் அக்கினி தேவனின் முகத்தினின்றும் பிறந்தனன் எனக் கொள்க. இச்செய்தி வில்லிபுத்தூரார் பாரதம், ஆதி பருவம், குருகுலச் சருக்கம் பின்வரும் பாடலில் கூறப்படுகிறது

பத்திரட் டியிலீரிரண் டொழிந்த பல்கலையோன்
மித்திரற் கவைகொடுத்து முன்மீளவும் கவர்வோன்
அத்திரிப் பெயரந்தண னம்பகந் தனிலும்
சித்திரக் கனல்முகத் தினும்பிறந் தொளிசிறந்தோன்.

—குருகுலச்சருக்கம், 5-ம் பாடல்.

இப்பாடலின் ஈற்றடி சித்திரக்கனல் முகத்தினும் பிறந் தொளி சிறந்தோன்." என்று சந்திரன் கனல் முகத்தில் பிறந்ததைக் குறிப்பிடுதல் காண்க. வில்லிபாரதத்துக்கு உரையெழுதிய திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் "சந்திரன் பிறப்பினுள் நெருப்பினின்று தோன்றிய வரலாறு தெரியவில்லை" என்று எழுதியுள்ளார்.

தூமதி—அக்கினி எல்லாப் பொருளையும் தூய்மை செய்யும் இயல்பினதாகையால் அதனிற்றோன்றிய மதி தூமதி என்று கூறப்பட்டதாகக் கொள்க. அல்லது இறைவனார் தலையிலணிந்தது ஒருகலைப் பிறையாகலின் களங்கமின்றித் தூய்மையானதாக இருந்தது என்றும் கொள்ளலாம். அன்றியும் இறைவனாரது திருச்சடை சம்பந்தம் பெற்றமையால் தூய்மையாகியது என்றும் கூறலாம்.

மனமலி மைந்தர்—எண்ணத்துள் நிறைந்த வீரர் அல்லது கருணை நிறைந்தவரும் வீரமுடையவரும் எனக்கொள்க. உலக வழக்கிலும் 'கருணை காட்டுக' என வேண்டுவோர் 'சற்றே மனம் வைக்கலாகாதா' என்று இரத்தலும் காண்க. கருணையும், வீரமும் ஒருங்கே நிறைந்த நம் இறைவர் இம்மங்கை வாடும்படி மயல் (மயக்கம்) செய்யலாமா? இச்செய்கை இவர்க்கு மாண்பாகுமா? ஆகாது என்று அருளியதாகக் கொள்க.

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை
முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச்
சதுர்செய்வதோ இவர்சார்வே. 5

5. அடியார்களால் அபிடேகஞ் செய்யப்படும் பால், நறுநெய் முதலியவற்றில் விருப்பத்துடன் ஆடி, நீண்டு வளர் தலையுடைய சடைமேல் கங்கையாற்றினை வைத்து, மொந்தை முழவம்-குழல்-தாளம்-வீணை ஆகிய வாத்தியங்கள் முழங்கக் கீதங்கள் பாடி ஆடும் ஆந்தை போன்ற பெரும் விழிகளையுடைய சிறிய பூத கணங்களையுடையவரும், திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்றவரும், திருநீற்றைச் சாந்தென அணிந்த திருமார்பினை உடையவருமான இப்பெருமானோ இத்தையலை வாடும்படிச் சதுர் செய்வது? இஃதோ இவரது சார்பு?

வாய்மூரி—இசையின் ஒருவகை. இங்கு இசைப்பொதுமையைக் குறித்தது.

மாந்தர்—மனிதர்; இங்கு அடியார்களைக் குறித்தது. மோந்தை - மொந்தை என்னும் வாத்தியம். மோந்தை என முதல் நீண்டது. முரல - ஒலிக்க, முழங்க. சதுர்-திறம்; சார்வு-சார்ந்திருத்தல், இங்கு அன்பைக் குறித்தது.

நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணுலுற்றுநோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி
ஐவிரற் கோவணவாடை

பாறருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறியர் ஏழையைவாட
இடர்செய்வதோ இவர்ஈடே. 6

6· திருமேனியில் வெண்ணீறு பூசிச்சடைகள் தாழ, மன்மதன் எரிந்து போகும்படி நெற்றிக்கண்ணால் உற்று நோக்கி, கங்கையைத் தலையில் சூடி, ஆடும் பாம்பினை ஆட்டி, ஐந்து விரற்கடை.யளவு அகலமான கோவணத்தினைச் சாத்திய திருமேனியையுடையவரும் பூதகணங்களின் தலைவரும், திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருப்பவரும், எருதேறும் பெருமானுமான இவரோ அபலையான இப்பெண்ணை வாடும்படி இடர்செய்வது? அவரது பெருமை இதுவோ?

நீறு மெய்பூசி—''கங்காளன் பூசும் கவசத் திருநீறு'' என்பது திருமந்திரம். பிள்ளையாரின் முதல் திருப்பதிகத்தில் 'காடுடைய சுடலைப் பொடிபூசி' என்று அருளிச்செய்ததும் காண்க.

சடைகள் தாழ-நீண்ட சடை என்பது கருத்து. ''நீடவல்ல வார் சடையான்'' என்று திருநெடுங்களத் திருப்பதிகம் 11ம் பாடலிலும் பிள்ளையார் கூறியுள்ளார்.

நெற்றிக்கண்ணால் உற்று நோக்கி—காமதகனத்தைக் குறித்தது. அல்லது ஸம்ஹரித்தலைக் கூறியதாகவும் கொள்ளலாம். ஆறது சூடி - கங்காதர மூர்த்தத்தைக் குறித்தது. ஆடரவாட்டி - இப்பதிக முதல் திருப்பாடலில் 'பணிவளர் கொள்கையர்' என்று அருளிச்செய்துள்ளதையே இங்கு இங்ஙனம் கூறினார்.

ஐவிரற் கோவணவாடை - கோவணத்தின் அகலம் குறித்தது. பாறருமேனியர் - (பால்தருமேனியர்) - திருநீற்றின் வெண்ணிறத்தினால் பால் போன்ற நிறத்தையுடைய திருமேனியையுடையவர். ''பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு'' என்ற அப்பரடிகளின் திருவாக்கும் காண்க.

(4ம் திருமுறை, 81ம் பதிகம், 4ம் திருப்பாடல்) இவ்வாறின்றி 'பால்' என்பதற்குப் பக்கம் எனக் கொண்டு கோவண ஆடை என்பதோடு இயைத்துக் "கோவண ஆடை பால்தரு மேனியர்" என்றும் கொள்ளலாம். ஏறது ஏறியர்-விருஷபாருட மூர்த்தி.

பொங்கிளநாகமொ ரேகவடத்தோ(டு)
ஆமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர்கொ லாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்
சதிர்செய்வதோ இவர்சார்வே. 7

7. மிக்க இளமையுடைய நாகம் ஒரு ஒற்றைச் சரமாயமைந்த மாலை போலமைய அதனுடன் ஆமையோடு, வெண்ணூல், கொன்றை மாலை மற்றும் மணமுடைய மலர்கள் இவற்றைப் புனைந்து, அழகும் இளமையுமுடையவராம் இவர் என்று யாவரும் கூறும்படி, உமாதேவியாராகிய இளமங்கையை ஒரு பாகத்தில் உடையவராய்த் திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்றவரும், சங்கின் ஒளி போன்ற அழகிய வண்ணமுடையவருமான இப்பெருமானோ இப்பெண்ணை வாடும்படிச் சதிர் செய்வது? இஃதோ இவர் சார்வு? அழகிய இளமங்கையைத் தன் திருமேனியில் ஒரு பங்கிலே உடைய பெருமான் இளமங்கை ஒருத்தி வாடும்படி சதிர் செய்தல் முறையாகாது என்பது கருத்து.

நாகம் ஏகவடம் - ஒவ்வொரு நாகமும் ஒரு ஒற்றை வடமாலை போல் பல நாகங்கள் இறைவரது திருமார்பை அலங்கரிப்பதாகக் கொள்க அல்லது முத்து, எலும்பு இவற்றால் ஆன ஒற்றைச் சரமாலை எனக் கொள்ளினும் அமையும்.

சதிர், சார்வு—இவைகளுக்கு முன் 5ம் திருப்பாடலின் விளக்கவுரையில் கூறியதையே கொள்க.

ஏவலத்தால்விச யற்கருள்செய்து
இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய
மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழைவாடச்
சிதைசெய்வதோ இவர்சேர்வே. 8

8. அம்பின் வலிமையால் அருச்சுனனுக்கு அருள் செய்து, இராவணனை வலிமையழியச் செய்து மும்மூர்த்திகட்கும் முதல்வனும் அவர்களது இதயத்துள் நின்று இயக்குபவனுமுள்ள மூர்த்தியாகிய சிவபிரானையன்றி வேறு ஒருவரது பெயரையும் மொழியாதவளாகிய இப்பெண் வாடும்படி, யாவராலும் புகழ்ந்து பேசப்படும் அழகிய திருப்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற தேவதேவராகிய இப்பெருமானே துன்பம் செய்வது? இவரது தொடர்பின் தன்மை இதுவோ?

ஏ—அம்பு; 'ஏவலத்தால் அருள் செய்தல்' என்பது அருச்சுனனுடன் போர் செய்து அவனது விற்பயிற்சியின் திறனறிந்து அவனுக்குப் பாசுபதம் என்னும் சிவக்கணையை அருளியதைக் குறித்தது.

மூவரிலும் முதலாய—"மூவர் கோனாய் நின்ற முதல்வன்." (திருவாசகம், திருச்சதகம், 90) நடுவாய 'நடு' என்பது இதயத்தைக் குறிக்கும். இறைவர் மூவருடைய இதயத்திலும் அவரையதிட்டித்து நின்று முத்தொழில்களையும் நடத்துகிறார் என்பதாம்.

சேயிழை—செவ்விய ஆபரணங்களையணிந்த பெண்.

தேவதேவர்—தேவர்கள் அனைவருக்கும் மேலானவர்; மஹாதேவர் என்ற திருநாமத்தின் விளக்கமாகக் கொள்க.

சேர்வு—சேர்தல், அடைதல், தொடர்பு கொள்ளுதல். இவரது தொடர்பு அளிக்கும் பயனின் தன்மை இதுவோ? என்று வினவியதாம்.

மேலதுநான்முகன் எய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனும் எய்தியதில்லை
யெனஇவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைங்தொடிவாடப்
பழிசெய்வதோ இவர்பண்பே. 9

9. நான்முகன் வானத்தில் பறந்து சென்று திருமுடியை அடையவில்லை. (காணவில்லை). திருமால் (பன்றியாகி) பாதாளம் ஏழினும் சென்றும் திருவடியை எய்தியதில்லை (காணவில்லை). இவ்வாறு பிரம விட்டுணுக்களுக்கு அரியவராய் இப்பெருமான் ஓங்கி நின்றதேயல்லாமல் (அனைவரும் எளிதில் தொழுது அருள்பெறும் நிலையில்) சந்திரன் தவழ்கின்ற ஆல் முதலிய மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியுள்ள பால் வண்ணப் பெருமானோ இப்பைந்தொடி வாடும்படி பழி செய்வது? இஃதோ இவரது பண்பு?

அரி அயனுக்கு அரியவராயிருப்பினும் அடியார்களுக்கு மிக எளியவராக இருப்பது பெருமானுக்கு இயல்பு ஆகும். அத்தகைய இவர், சிவநாமம் தவிர வேறு மொழியாத வளாகிய (முன் பாடலிற்குறிப்பிட்டது) இப்பெண்ணை வாடும் படி செய்வது, இவருக்குப் பழியாகுமேயன்றி பண்பாகாது என்பது பாடலிற்போந்த பொருளாகும். பைங்தொடி - பசிய வளையல்களையணிந்த பெண். பண்பு - நற்குணம், அறம்.

நாணொடுகூடிய சாயினரேனும்
நகுவர் அவரிருபோதும்
ஊணொடுகூடிய உட்குந்தகையார்
உரைகளவைகொளவேண்டா

ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ இவர்பொற்பே. 10

10. நாணம் முதலிய மகடூஉக்குணங்களோடு கூடிய மென்மையுடைய உயர்குல மகளிராக இருப்பினும் (தவம் என்ற பெயரால் அவம் புரிந்து நிர்வாணிகளாகத்திரியும்) சமணர்களைக் கண்டால் பரிகசித்து நகைப்பர். அத்தகைய சமணர்களும், இரண்டு வேளையும் வயிறு புடைக்க உண்பவர் களும் அஞ்சத்தக்க இயல்புடையவர்களுமான பௌத்தர்களும் கூறும் புல்லிய உரைகளானவற்றைப் பொருளாகக் கொள்ள வேண்டாம். மாதியலும் பாதியனாகத் திருவடிவங் கொண்ட வரும் திருபாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கின்ற பூண் களையணிந்த நீண்டமார்பினையுடைய பெருமானே பூங்கொடி போன்ற இப்பெண் வாடும்படி புனைசெய்வது? இஃது இவருக்கு அழகாகுமோ? (ஆகாது)

சாயினம் - மென்மையையுடைய மகளிர் கூட்டம். இச் சொல்லுக்கு இப்பொருள் உளதாதலை பதிற்றுப்பத்து 60ம் பாடலில் வரும் "துவ்வா நறவின் சாயினத்தானே" என்ற ஈற்றடியாலும் அறியலாம். டாக்டர் உ. வே, சாமிநாதையர் அவர்கள் "உண்ணப்படாத நறவென்னும் ஊரின்கண்ணே மென்மையையுடைய மகளிர் இனத்திடையேயுள்ளான்" என இத்தொடருக்குப் பொருள் விளக்கம் செய்துள்ளார், இம்மகளிர் ஆடல் மகளிர் என்பதும் அறியப்படுகிறது.

நாணொடு கூடிய - சாயினம் என்பது ஆடல் மகளிர் எனவும் பொருள்படுதலால் நாணொடு கூடிய என்ற பிறி தினியைபு நீக்கிய விசேடணத்தால் பிள்ளையாரால் இப் பாடலில் கூறப்பட்ட மகளிர் உயர்குல மகளிர் என்பது புலனாகும். என்னை? நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகியவை உயர்குடி மகளிரின் குணங்களாகையால் என்க. 'நாற்குணமும் நாற்படையா...' என்றார் புகழேந்தியார் (நளவெண்பா-32)

இவ்வுயர் குணங்களில் நாணம் எனப்படுவது தலையாய தாம். இதன் பயனாக வருவது அடக்கம் என்னும் நற்பண் பாகும். இப்பண்பு காரணமாக உயர்குடி மகளிர் பொது விடங்களில் வாய்விட்டுச் சிரியார். அத்துணை அடக்கமுள்ள உயர்குடி மகளிரும் சமணர்களின் ஆடையின்றித்திரியும் இழிந்த நிலைகண்டு பரிகசித்துச் சிரிப்பர். "நாணொடு கூடிய சாயினரேனும் நகுவர் அவர்" என்ற இப்பாடற்பகுதிக்கு இங்ஙனம் பொருள் கொள்க. சாயினரேனும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்பும்மையாம். நகுவரவர் - எள்ளி நகை யாடப்படும் சமணர்.

இருபோதும் ஊணொடு கூடிய தகையார் - பௌத்தர்கள் சமணர்கள் பகற்பொழுதுமட்டுமே உண்பர். பௌத்தர்கள் பகல், இரவு ஆகிய இருபொழுதுகளிலும் உண்பர்.

உட்குந்தகையார் – இவர் அஞ்சத்தக்க இயல்பினர். இதை சமணர், பௌத்தர் ஆகிய இருதிறத்தாருக்குமே கூட்டி உரைக்கலாம். இருவருமே கடவுட் கொள்கையை மறுப்பவர் களாகலின் அவர்களது கூட்டுறவு மக்கள் அறிவைக் கெடுத்துப் பாழ்நரகில் சேர்க்கும். ஆகவே அவர்கள் நன் மக்களால் அஞ்சி ஒதுங்கத்தக்கவர்களாவர்.

தகையார் என்பதை 'ஊணொடு கூடிய தகையார்' என்றும் 'உட்குந்தகையார்' என ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்க சில பதிப்புகளில் உட்கு நகையால் என்று இருப்பது பிழை. 'உட்குந்தகையார்' என்ற சரியான பாடமே பழைய பதிப்பு களில் காணப்படுகிறது.

(உதாரணம்—1. பிருங்கி மாநகரம் வேம்புலி முதலியார வர்கள் குமாரர் நமசிவாய முதலியாரவர்களால் தமது சென்னை-சூளை நிரஞ்சன விலாச அச்சியந்திர சாலையில் 1917ம் ஆண்டில் பதிப்பித்தது. இது பண்முறை.

2. யாழ்ப்பாணம் சாமிநாதபண்டிதரின் 1911வது ஆண்டு தலமுறைப் பதிப்பு - இன்னும் சிலவுளவேனும் விரிவஞ்சி விடுத்தோம்).

[ஆசிரியர் குறிப்பு—இராணிப்பேட்டைப் புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனுர், கோவை அறிஞர் திரு. சி. சு. கண்ணுயிரம் ஆகிய இருவரும் உதவிய குறிப்புகள் இத்திருப் பாடலுக்கு உரைகாணப் பெரிதும் உதவின என்பதை நன்றி யுடன் தெரிவித்துக் கொள்கிருேம்.]

அகமலியன்பொடு தொண்டர்வணங்க
ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச்
சாரகிலா வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

11. நெஞ்சில் நிறைந்த அன்போடு தொண்டர்கள் வணங்கத் திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்றவரும், மணம் நிறைந்த மாலைகளையணிந்து அழகாய் விளங்கும் புனிதரும் இப்பெருமான் எனும்படி, மலர்கள் நிறைந்த பொழில் கள் சூழ்ந்த சீகாழியிலவதரித்த நன்மை பயக்கும் தமிழ்பாடும் திருஞானசம்பந்தன் பாடிய தகுதி நிறைந்த தண்டமிழ் மாலை களாகிய இவை கொண்டு இறைவரைத்துதிக்க வினைகள் சாராவாம்.

புகை—இங்கு மணம் என்ற பொருளில் வந்ததாகக் கொள்க. நகை-மலர்; நற்றமிழ்-நன்மை பயக்கும் தமிழ்; தகைமலி-தகுதி நிறைந்த; அத்தகுதியாவது அன்று கொல்லி மழவன் மகளது பிணியைத் தீர்த்ததுவேயன்றி இன்றும் ஓதுவார் பிணி தீர்க்கும் தன்மையாம். தண்டமிழ்—தண்மை பொருந்திய தமிழ். பிறவி வெப்பம், பிணியின் வெப்பம் முதலா யினவற்றைப் போக்கலால் தண்டமிழ் என்றருளினர்.

தலவரலறு—காவிரி வடகரைத் தலங்களுள் 62வது தலமான திருப்பாச்சிலாச்சிராமம் இப்போது திருவாசி என்று வழங்கப்படுகிறது. திருப்பாச்சில் என்பது ஊரின் பெயராகவும் ஆச்சிராமம் என்பது கோயிலின் பெயராகவும் முன்பு வழங்கி வந்தது. இங்குக் கொல்லி மழவனது பெண்ணைப் பீடித்திருந்த முயலகனென்னும் கொடும்பிணி நீங்குமாறு திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாடியருளிய வரலாறு பதிக வரலாற்றில் காண்க. அவ்வரலாறு தொடர்பாக இக்கோயிலின் மண்டபத்தின் தூண் ஒன்றில் கொல்லிமழவன், அவனுடைய மனைவி, மகள் ஆகிய மூவர்களுடைய சிலைகள் உள்ளன. பதிகப் பாடலில் 'சுடர்ச்சடை சுற்றி முடித்து' என்று குறிப்பிட்டருளியவாறே இத்தலத்துக் கூத்தப்பிரான் சடை சுற்றி முடித்த திருக்கோலத்துடன் விளங்குகின்றார்.

இத்தலத்தில் அம்பிகை அன்னப்பறவை வடிவாய் இறைவரை வழிபட்டார் என்றும், மற்றும் நான்முகன், இலக்குமி, அகத்தியர் முதலானவர் வழிபட்டுப் பேறுபெற்றனர் என்றும் கூறப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் "இவரலாதில்லையோ பிரானார்" என்று பதிகம்பாடி விழுநிதிக் குவை இறைவரிடம் பெற்றதும் இத்தலத்திலேயாம். கோயிலுக்கு எதிரில் மிக உக்கிரதேவதைகளான தேரடிக் கருப்பண்ண சாமி கோவிலும், மதுரைவீரன் கோயிலும், அடைக்கலங்காத்தான் கோயிலும் உள்ளன. திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்திகள் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் இத்தலத்துக்கு உள்ளன.

இத்தலம் திருச்சி-விழுப்புரம் இரயில் பாதையில் பிட்சாண்டார் கோவில் நிலையத்தினின்றும் மேற்கில் சுமார் 5 கி. மீ. தொலைவிலும், கொள்ளிடம் வடகரையில் திருவானைக்காவுக்கு வடமேற்கில் 5 கி. மீ. தொலைவிலும் உள்ளது. இறைவர் திருப்பெயர் - மணிகண்டீசர், மாற்றறிவரதர், சமீவனேசுவரர்; இறைவியார் திருப்பெயர்—பாலசௌந்தரி, பாலாம்பிகை; தீர்த்தம்—அன்னமாம் பொய்கை (கிணறு), சிலம்புநதி; தலவிருட்சம்—வன்னிமரம். சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்.

திருப்பைஞ்ஞீலி

பதிகவரலாறு:—திருப்பாச்சிலாச்சிராமத்தில் நிலைபெற்று விளங்கும் நேரிழைபாகத்தராகிய மணிகண்டேசப் பெருமானை வணங்கி, கூடும் அருளுடன் அங்கமர்ந்தார். பின்னர் பிறபதிகளையும் கும்பிடும் கொள்கையை மேற்கொண்டு, ஆடல்புரியும் பிரானார் பதிகள் பிறவும் அணைந்து அடிபோற்றி ஏகி, அறிவுடையோர்கள் வாழுந் திருப்பைஞ்ஞீலியில் கோயில் கொண்டுள்ள இறைவரை இறைஞ்சச் சென்றார். அங்குப் பைஞ்ஞீலிப் பெருமான் கழல்பணிந்து பாடிய "மண்பரவுந் தமிழ்மாலை" இத்திருப்பதிகமாகும்.

பண்-காந்தாரபஞ்சமம்] திருச்சிற்றம்பலம் [3-ம் திருமுறை

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓரிடங் குறைவிலர் உடையர் கோவணம்
நீரிடஞ் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே. 1

பதிகப்பொழிப்புரை:—1. வேதங்கள் துதித்துப் பாடுகின்ற அடிகளாராகிய சிவபிரான் புறங்காட்டினையல்லாது வேறு ஓரிடம் இல்லாதவர். (அதனால்) எவ்விதமான குறைவுமில்லாதவர். கோவண உடையை அணிந்தவர், கங்கை நீர் தங்குமிடம் அவரது சடையாகும். அவரது ஊர்தி அறக்கடவுளான விடையேயாகும், பூத கணங்கள் நித்தலும் அவருக்குப் பணிசெய்யும். அத்தகைய பெருமான் பயிலுவது திருப்பைஞ்ஞீலியாகும்.

முதலடி, "ஆரிடம்பாடு அடிகள் காடலால்" என அன்வயப்படுத்தப்பட்டு "ஓரிடம்" என்னும் இரண்டா

மடியின் தொடக்கத்தோடு இயைத்து, முதலடியில் உள்ள 'பாடிலர்' என்பதில் உள்ள 'இலர்' என்பதோடு சேர்த்துப் பொருள் கொள்ளப்பட்டது. "ஆரிடம்பாடு அடிகள் காடலால் ஓரிடம் இலர்" எனவரும். ஆரிடம் (ஆர்ஷம்) வேதங்கள். இச்சொற்கு இப்பொருள் உளதாதலை, The Students Sanskrit Dictionary by Sri Vaman Sivaram Apte என்ற ஸம்ஸ்க்ருத - ஆங்கில அகராதியில் காணலாம். இருடிகள் அருளிச்செய்த பாடல்கள் என்ற பொருளும் உண்டு. இப் பொருளும் இங்கு அமையும், அதாவது இருடியர்களுடைய பாடல்கள் இறைவரைப் போற்றிப்பாடுகின்றன என்பதாம். இவ்வாறின்றி வேதங்கள் பாடும் இல்லை (வாசஸ்தானத்தை) உடையவர் என்று சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் பொருள் உரைத்தனர். அவர்களது குறிப்புரை வருமாறு.

"ஆரிடம் - முனிவர் கண்டநூல். வேதசாகைகள் பலவும் பல முனிவர்களாலும் காணப்பட்டமையால் வேதம் ஆர்ஷம் எனவும் படும். பாடிலர்-அவற்றல் பேசப்பட்டவர், பாடப்படும் இல்லையுடையவர். இல் - வாசத்தானத்தை யுடையவர். 'அத்துவாக்களின் முடிவிலுள்ள சிவலோகம் இறைவனுக்கு வாசத்தானம். (அவன்) அத்துவாக்களின் கரையையடைகின்ருன். அது வியாபகமாகிய இறைவனுடைய பரமபதம் என்பது சுருதி"

இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனுர் அவர்கள் 'பாடிலர்' என்பதற்கு எதிர்மறையாகவே பொருள் கொள்ளலாமெனக் கருதினுர். அவர் கருத்துப்படி உரை விளக்கம் பின் வருமாறு கொள்க.

"ஆரிடம் என்பது முனிவர்களால் அருளப்பட்ட பாடல். எல்லாப் பாடல்களும் நன்கு அமையா. இலக்கண வழுக்களோடு சீரும் சிதைந்திருக்கும். அவற்றை ஆரிடம் என்று விதிவிலக்களிப்பர். எனவே இறைவன் பாடல்கள் ஆரிடம் ஆகா. இவை இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்கும்".

மருவிலார் திரிபுரம் எரிய மால்வரை
பருவிலாக் குனித்தபைஞ் ஞீலி மேவலான்
உருவிலான் பெருமையை உளங்கொ ளாதவத்
திருவிலார் அவர்களைத் தெருட்ட லாகுமே. 2

2. பகைவர்களது மூன்றுபுரங்களும் தீப்பற்றி எரியும்படி பெரியதான மேருமலையைப் பருத்த வில்லாக வளைத்தவரும், திருப்பைஞ்ஞீலியில் மேவுதலையுடையவருமாகிய சிவபிரான் வடிவமில்லாதவராவர். (அருபி). அவரது பெருமையை உணர்பவர்களே திருவுடையராவர். அவ்வாறு உணராத திருவிலாதவர்களை தெளிவுபடுத்தி உணரவைத்தல் என்பது இயலுமோ? (இயலாது என்பதாம்)

மருவிலார்—பகைவர்கள், இங்கு முப்புரத்தசுரர்களைக் குறித்தது. மால்வரை - மேருமலை;

உருவிலார்—அருவமானவன்; ஆயினும் முப்புரத்தை எரிக்க உருவுடன் பெரியதொரு வில்லேந்தி நின்றார் என்பதாம்.

திருவிலார்—அருவமாயும் உருவமாயும் அருவுருவமாயும் நிற்கும் இறைவரது பெருமையை உணர்ந்து வழிபடுபவர்களே திருவுடையராவர். அஃதில்லாதார் வேறு எவ்வகையான செல்வங்களைப் பெற்றவர்களேயானாலும் உண்மையில் திருவில்லாதவர்களே யாவர் என்பது பிள்ளையாரது திருவுள்ளக்கிடக்கையாகும். 2-ம் திருமுறை 176-ம் திருப்பதிகம் 5-ம் பாடலில்,

விண்ணுதலாத் தோன்றிய சீர்ப் பிரமபுரம் தொழவிரும்பி
எண்ணுதலாம் செல்வத்தை இயல்பாக அறிந்தோமே.

என்று பிள்ளையார் அருளிச்செய்துள்ளதையும் இங்குக் கருதுக. எனவே செல்வம் என்பது இறைவரைத் தொழ விரும்பும் எண்ணமே என்பது வலியுறுத்தப்பட்டது.

தெருட்டலாகுமே—தெருட்டலாகுமோ என்று வினாவாகக் கொண்டு பொருள் கொள்க. இறையுணர்வு இல்லாதவர் களைத் தெளிவிக்க இயலாது என்பதாம்.

அஞ்சுரும் பணிமலர் அமுதம் மாந்தித்தேன்
பஞ்சுரம் பயிற்றுபைஞ் ஞீலி மேவலான்
வெஞ்சுரந் தனிலுமை வெருவ வந்ததோர்
குஞ்சரம் படவுரி போர்த்த கொள்கையே. 3

3. அழகிய ஆண் வண்டுகள் வரிசையாக மலர்ந்துள்ள மலர்களையடைந்து தேனைக்குடித்துப் பெண் வண்டுகளுக்கு பஞ்சுரம் என்னும் பண்ணைப்பயிற்றுவிக்கும் திருப்பைஞ்ஞீலி என்னுமித்தலத்தில் விருப்பத்துடன் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் உமாதேவியாரும் அஞ்சும்படி கொடிய கான கத்தில் வந்த ஒரு யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்திக்கொண்ட கொள்கைதான் என்னேயோ?

சுரும்பு—ஆண் வண்டு; 'சுரும்பு மதுகரம் தும்பி ஆண் வண்டே'. (பிங்கல நிகண்டு). வண்டின் பொதுப் பெயர் களில் காணப்படும் தேன் என்னும் பெயர் ஆண் வண்டாகக் கூறப்படாமையின் தேன் என்பதற்குப் பெண் வண்டு எனப் பொருள் கொள்ளப்பட்டது. சூடாமணி நிகண்டு தேன் என்பதற்குப் பெண்வண்டு என்றே பொருள் கூறுகிறது. இங்ஙனம் கொள்ளும்பொழுது உள்ளுறை பொருள் நயமும் ஒன்று தோன்றுகிறது. அஃதாவது ஆண் வண்டுகள் தேனைக் குடித்துப் பெண் வண்டுகளுக்குப் பஞ்சுரம் பயிற்றுவது போல திருப்பைஞ்ஞீலி வாழும் ஆண் மக்கள் இறைவரைத் தரிசித்து ஆனந்தத்துடன் தங்கள் பெண்டிர்களுக்கும் இறைவழிபாட் டைப் பயில்விக்கின்றனர் என்பதாம். பஞ்சுரம் - ஒருவகைப் பண். பண்ணின் பொதுமையைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

வெஞ்சுரம்—வெப்பம் மிக்க காடு. இங்குக்குறிப்பிட்ட குஞ்சரம் காட்டானையன்று, கஜாஸுரன் என்னும் அசுரனுகும். யானை என்ற பொதுமைபற்றி இங்ஙனம் கூறினர்.

கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
பாடல்வண் டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
பேடலர் ஆணலர் பெண்ணு மல்லதோர்
ஆடலை யுகந்தவெம் அடிகள் அல்லரே. 4

4. காந்தள் மலர்கின்றதும் நகரின் புறத்தே அணி செய்வதுமான முல்லை நிலத்தைச் சேர்ந்த காடுகளில் முல்லை மலர்களின் மேல் பாடும் வண்டின் கூட்டம் இசை முரலுதலை யுடைய திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளியிருப்பவரும் ஆடலை யுகந்தவருமாகிய எமது தலைவராகிய சிவபிரானுர் பேடலர், ஆணலர், பெண்ணும் அல்லதோர் தன்மையராவர்.

முரலல்—ஒலித்தல். மூக்கினுல் இசைத்தல் போன்றதொரு ஒலி, "மூக்கே நீ முரலாய்" என்பது அப்பரடிகள் வாக்கு (திருஅங்கமாலை - 4). இத்திருப்பாடலின் பிற்பகுதியுடன் அப்பரடிகளின் திருவொற்றியூர்த் திருத்தாண்டகம் "மண்ணல்லை விண்ணல்லை" எனத்தொடங்கும் திருப்பாடலில் "பெண்ணல்லை ஆணல்லைப் பேடுமல்லை, பிறிதல்லையானுயும் பெரியாய் நீயே" என்ற பகுதி ஒப்பிட்டுக் காண்டற்குரியது. இக்கருத்தை "நைவஸ்த்ரீ ந புமானேஷு நசைவாயம் நபும்ஸக:" என்ற சுவேதாசுவதர உபநிஷத் (5-10) மந்திரப் பகுதியும் கூறுகிறது. "இவர் பெண் அல்லர், ஆண் அல்லர், இவர் நபும்ஸகர் (பேடு) அல்லர்" என்பது இதன் பொருள்.

விழியிலா நகுதலை விளங்கி ளம்பிறை
சுழியிலார் வருபுனற் சூழல் தாங்கினுன்
பழியிலார் பரவுபைஞ் ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்க லாகுமே. 5

5. விழியற்ற ஒரு வெண்தலையையும், விளக்கத்துடன் கூடிய பிறைச்சந்திரனையும், சுழித்து வருகின்ற கங்கை நீரை யும், சுற்றிய சடையிடத்தே தாங்கினவனும், திருப்பைஞ்ஞீலி என்னும் இத்தலத்தில் ஒருசிறிது கூட குற்றமற்றவர்கள் துதித்துப் பாடுகின்ற பாடல்களையுடையவனுமாகிய

சிவபிரானது திருவுருவத்தில் அடியவர்கள் செலுத்துகின்ற நிறைந்த அன்பைக் கெடுத்தற்கு எவராலும் ஆகுமோ? (ஆகாது என்றவாறு).

விழியிலா நகுதலை-விழியில்லாததும் நகைத்தலையுமுடைய தலை எனப்பொருள் கொள்ளப்பட்டது. இத்தலை தாருகா வனத்து இருடியர்களால் செய்யப்பட்ட ஆபிசாரவேள்வி யினின்றும் எழுந்து இறைவர்மேல் ஏவப்பட்டதாகும். இறைவர் அதனைத்தம் கையால் பற்றித்தம் தலையிடத்தே செருகிக் கொண்டார் என்பது கந்தபுராண தக்ஷகாண்டச் செய்தி, இனி, விழியிலார் என்பது பாடமாயின் கண்ணில்லாதவர் என்றே பொருள் கொண்டு, இறைவரை அறியும் அறிவுக் கண்கள் இல்லாத தாருகவன முனிவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். கண்ணிருந்தும் குருடர்களாயினர் என்பதாம்.

பழி—குற்றம், நிந்தை. குற்றமற்றவர்கள் துதித்து வழி படும் பெருமான் என்பதாம். பழியிலார் பைஞ்ஞீலி எனச் சேர்த்து குற்றமற்ற பெரியோர்கள் வாழ்கின்ற பைஞ்ஞீலி எனவும் கொள்ளலாம். இதைச் சேக்கிழார் பெருமான் "சேடர்கள் வாழுந் திருப்பைஞ்ஞீலிச் சிவபெருமானை இறைஞ்சச் சென்றார்" (பெ. பு. 2220) என்று கூறியருளி யுள்ளமையாலும் அறியலாம். சேடர்கள்-அறிவிற் பெரியோர் கள். இச்சொல் பதிகத்தில் உள்ள பழியிலார் என்பதன் விளக்கம் போல அமைந்தது காண்க.

கிழி—எழுதுபடம். எனவே திருவுருவம் எனப் பொரு ளுரைக்கப்பட்டது. கிழி என்பதற்குக் கோவணம் எனப் பொருள் கொண்டு, கோவண ஆடையை உடுத்தும் சிவபிரா னிடம் ஏற்படும் அன்பைக் கெடுக்க இயலுமோ? எனவுங் கொள்ளலாம்.

விடையுடைக் கொடிவல னேந்தி வெண்மழுப்
படையுடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவலான்
துடியிடைக் கலையல்கு லாளொர் பாகமாச்
சடையிடைப் புனல்வைத்த சதுர னல்லனே. 6

6. இடபக் கொடியை வலப்புறத்தில் ஏந்தி, வெண்மை யான மழுப்படையையுடைய கடவுளும், திருப்பைஞ்ஞீலி என்னுமித்தலத்தில் விருப்பத்துடன் எழுந்தருளியிருப்பவரு மான சிவபிரான் உடுக்கைபோன்ற இடையையுடைய உமா தேவியார் தமது திருமேனியில் ஒரு பாகத்திலிருக்கவும், தமது திருச்சடையில் நீர் வடிவாகிய மற்றொருத்தியை வைத்த திறமையாளன் அல்லனோ?

விடையுடைக் கொடியவன்—விருஷபத்துவஜன்.

வெண்மழு—தீட்டப்பட்டு ஒளியுடன் கூடியதால் வெண் மழு எனப்பட்டது.

தூயவன் தூயவெண் ணீறு மேனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எனைச்செயுந் தன்மை யென்கொலோ, 7

7. தூய்மையானவரும் தூய வெண்ணீறு திருமேனி முழுவதும் பரவும்படி பூசியவரும், இடமகன்ற திருப்பைஞ் ஞீலியைக் கோயிலாகக் கொண்டவரும், மூங்கில் போன்ற தோளையுடைய உமாதேவியார் ஒரு பாகமாகப் பொருந்தி இருப்பவருமாகிய சிவபிரான் என்னைச் செய்யும் தன்மை தான் என்னே?

'உள்ளங்கவர் கள்வன்' என்று தமது முதலாவது திருப் பாடலில் கூறியபடி தனது உள்ளத்தைக் கவர்ந்து சீவ போதத்தை இழக்கச் செய்த பேரருட் செய்கையினையே இத் திருப்பாடலின் ஈற்றடியில் ''என்னைச் செய்யும் தன்மை என் கொலோ'' என்று குறிப்பிட்டார். தலைவன் பால் பெருமா லுற்ற தலைவியின் கூற்றாக அகப்பொருள் துறைக்கேற்பவும் பொருள் கொள்ளலாம்,

தொத்தின தோள்முடி யுடைய வன்றலை
பத்தினை நெரித்தபைஞ் ஞீலி மேவலான்
முத்தினை முறுவல்செய் தாளொர் பாகமாப்
பொத்தினன் திருந்தடி பொருந்தி வாழ்மினே. 8

8. கொத்துப் போன்றமைந்த இருபது தோள்களையும் பத்து முடிகளையுமுடைய இராவணனது தலைகள் பத்தினையும் நெரியுமாறு செய்தவராகிய திருப்பைஞ்ஞீலியில் பொருந்தியுள்ள சிவபிரான் முத்துக்களைப் போன்ற பற்களையுடைய உமாதேவியாரை ஒரு பாகமாக அணைத்துக் கொண்டவன். அத்தகைய பெருமானது திருவடிகள் மனதில் பொருந்துமாறு செய்து வாழ்வீர்களாக.

முத்தினை முறுவல் செய்தாள்.—முத்துக்களையே கோவை செய்து பல் வரிசையாக அமைத்துக் கொண்டாள். பற்கள் முத்துக்களை ஒத்து இருந்தன என்பதாம். "முத்தன்ன வெண்ணகையாய்..." என்ற திருவெம்பாவைப் பாடற் பகுதியும் காண்க. தன் பல்லொளிக்கு முத்தின் ஒளி ஒவ்வாதாக, அதனை இகழ்ந்தவள் எனினுமாம். இப்பொருளில் முறுவல் என்பது இகழ்ச்சிச் சிரிப்பைக் குறிக்கும்.

நீருடைப் போதுறை வானும் மாலுமாய்ச்
சீருடைக் கழலடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள் பைஞ்ஞீலி மேவிய
தாருடைக் கொன்றையந் தலைவர் தன்மையே. 9

9. தண்ணீரில் பூக்கின்ற தாமரை மலரில் உறைபவனாகிய பிரமதேவனும், திருமாலுமாய் (இருவரும் தேடியும்) முறையே சிறப்பு மிக்க திருமுடியையும் திருவடியையும் காண்கிலர். உலகம் முழுமையையும் தனக்கு உடைமைப் பொருளாக உடைய கடவுளும், திருப்பைஞ்ஞீலியில் விரும்பி எழுந்தருளிய கொன்றைமாலையணிந்தவருமான சிவபிரானரது (பரத்துவமாந்) தன்மை இதுவேயாகும்.

நாரணனும் நான்முகனும் தேடிக் காணாமையே சிவபிரான் முழு முதற் கடவுள் என்பதற்குச் சான்ருகும். வேறு சான்றுகள் வேண்டா என்பதாம்.

பார்—பூமி, இங்கு உலகம் என்ற பொருளில் வந்தது. உலகம் என்று பொதுப்படக் கூறினமையால் பதினன்கு உலகங்களுங் கொள்க.

பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியா தவர்களைச் சாதி யாததோர்
கோலியா வருவரை கூட்டி யெய்தபைஞ்
ஞீலியான் கழலடி நினைந்து வாழ்மினே. 10

10. மயிற்பீலியைக் கையில் ஏந்திவரும் சமணர்களைப் பெருமையுடையவர்களாகக் கொண்டும் பௌத்தர்களுடைய நூல்களில் பொருள் உளதாகவும் கொண்டும் (அதனல்) மனம் சஞ்சலமடைந்து சிவபூசை கைவிடாத மூவரை அழிவு செய்யாத திருமாலாகிய அம்பினை அரிய மேரு மலையாகிய வில்லில் பூட்டி எய்தவனாகிய பெருமானும், திருப்பைஞ்ஞீலியைக் கோயிலாகக் கொண்டவனுமாகிய சிவபிரானுடைய வீரக்கழல்களணிந்த திருவடிகளை தியானித்து வாழ்வீர்களாக.

பீலியார்—சமணர்கள்; பிடகர்—திரிபிடகம் என்னும் நூலைக் கொண்ட பவுத்தர்கள்.

சமணர் பெருமை; பௌத்தர் நூன்மை—சமணர்களுக்குப் பெருமையும், பௌத்தர் நூல்களில் பொருளும் உண்மையிலேயே இருந்ததாகக் கூறுவது இங்குப் பிள்ளையாரது திருவுள்ளமல்ல. ஏனைய பல பதிகங்களில் சமணர்களையும் பௌத்தர்களையும் இகழ்ந்து பாடியுள்ளதே இதற்குச் சான்ருகும். பொய்யர், துட்டர், எக்கர், கையர் இவ்வாறெல்லாம் சமணர்களையும், மெய்யைப் போர்க்கும் பொய்யர், முதுமட்டையர், முதுதேரர் மதியில்லிகள்........என்றிவ்வாறெல்லாம் பௌத்தர்களையும் குறிப்பிட்டுள்ளார். எனவே பெருமை

யிருப்பதாகவும், நூன்மையிருப்பதாகவும் கொண்டு மயங்கி முப்புரத்தசுரர்கள் சிவபூசையைக் கைவிட்டனர் என்பதே கருத்து. அவருள் மூவர் மட்டும் மனஞ்சலியாது சிவபூசை யில் உறுதியாக இருந்தனர். இறைவனூர் எய்த திருமாலா கிய கணை இம்மூவரை ஒன்றும் செய்யாது மற்றவர்களையெல் லால் எரித்தது. (இதன் விரிவு ஸ்காந்த மஹாபுராணம், உபதேச காண்டத்தில் காண்க).

"உய்யவல் லாரொரு மூவரைக் காவல் கொண்(டு)
எய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற".

என்ற திருவாசகம், திருவுந்தியார் பாடலுங் காண்க. திருமுறைகளில் இச்செய்தி கூறும் பாடல்கள் பல உள. விரி வஞ்சி விடுத்தாம். முப்புரத்தசுரரை வஞ்சித்தவர் பௌத்தர் களே (இவ்வேடத்தில் திருமாலும் நாரதரும்) யாயினும், இனம் பற்றி சமணர்களையும் உடன் கூறி யருளினூர் எனக் கொள்க. திருக்கூவம் தலபுராணம் "திருமாலானவர் புத்தர், ஜினர், அருகர் என்ற மூவகை உருவுடன் சென்றூர்" என்று கூறுவதையும் இங்குக் கருதுக.

சாலியாதவர்—மனஞ்சலிக்காதவர் இங்கு சிவபூசை கை விடாது உறுதியுடன் இருந்த மூவரைக் குறித்தது. சலியா தவர் என்பது எதுகை நோக்கி முதல் நீண்டது. சாதித்தல் வெல்லுதல், இங்கு முப்புரங்களை அழித்தமை குறித்தது. கோல்—அம்பாகிய திருமால்.

கண்புனல் விளைவயற் காழிக் கற்பகம்
நண்புணர் அருமறை ஞானசம் பந்தன்
பண்பினர் பரவுபைஞ் ஞீலி பாடுவார்
உண்பின வுலகினில் ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

11. இடமெல்லாம் நீர் நிலைகளையும், நெல் முதலிய பயிர் விளைகின்ற நிலங்களையும் கொண்ட சீகாழிப் பதியில் அவதரித்த கற்பகத்தரு போன்றவரும்; நட்பின் பெருமை உணரும் அருமறையாளருமாகிய திருஞானசம்பந்தர் துதித்துப்பாடிய, நற்பண்பினர் நிறைந்த திருப்பைஞ்ஞீலிப் பதிகத்தைப் பாடுபவர்கள் நுகர்ச்சிக்குரிய பொருள்கள் அனைத்தையும் பெற்று இவ்வுலகில் பெருமையுடன் ஓங்கி வாழ்வார்கள்.

கண்புனல் விளைவயற்காழி—'விளைவயற்கண் புனற்காழி' எனமாற்றி வயல்களில் நீர் நிரம்ப உடைய வளம் மிக்க சீகாழி என்றும் கொள்ளலாம்.

கற்பகம்—கற்பகத்தரு போன்று தன்னையடைந்தவர்க்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மையைக் குறித்தது. முத்திச் செல்வத்தை வழங்கும் குறிப்பு. பின்னர் திருப்பெருமண நல்லூரில் அனைவருக்கும் வீடுபேறு வழங்கவுள்ளதன் குறிப்புமாம்.

நண்பு உணர்—சிறுத்தொண்ட நாயனார், திருநீலநக்க நாயனார் முதலானோர்க்குத் திருஞானசம்பந்தர் தமது நண்பினை அருள உள்ள குறிப்பு.

இத்திருப்பாடலின் 2, 3-வது அடிகள், "நண்புணர் அருமறை ஞானசம்பந்தன் பரவு பண்பினர் பைஞ்ஞீலி பாடுவார்" என்று அன்வயப்படுத்திப் பொருள் கொள்ளப் பட்டது. உண்பின - நுகர்ச்சிக்குரிய பல பொருள்கள்.

தலவரலாறு:—காவிரி வடகரைத் தலங்களுள் 61-வது தலமான திருப்பைஞ்ஞீலி பசியஞீலி என்னுமொரு வகை வாழைமரத்தைத் தலவிருட்சமாக உடைமையால் அப்பெயர் பெற்றது. அம்பிகை இங்குத் தவஞ்செய்தார் என்றும் அவருக்கு உதவியாகவந்த அரம்பையர்கள் வாழைமரங்களாகி நிழல் செய்தார்கள் என்றும் இறைவர் அம்மையை

அழைத்துச் சென்று திருக்கயிலையில் திருமணஞ்செய்து கொண்டார் என்றும் தலபுராணங் கூறுகிறது. ''ஞீலி என்ற வாழை கோயில் சுற்றில் இன்றும் தூறுகளாகக் காண வுள்ளது. இதன் இலை - காய் - கனி முதலியவற்றை இறை வருக்கே பயன்படுத்தலல்லது வேறு எவரேனும் தமக்குப் பயன்படுத்துவரேல் நோயுறுவது இன்றும் காணப்படும் அதிசயம்'' (சிவக்கவிமணியவர்கள் குறிப்புரை).

திருநாவுக்கரசு நாயனர் இத்தலத்தை நோக்கி வரும் போது பசியாலும் தாகத்தாலும் வருந்தினர் என்றும், சிவபெருமான் திருநீற்றந்தணராய் வந்து காவும் குளமும் அமைத்துப் பொதி சோறளித்த வரலாறு பெரியபுராணத்தில் காண்க. இறைவர் அப்போதமைத்த சோலையும் குளமும் தலத்துப் புறத்தே அணிமையில் உள்ளன என்பர் சிவக்கவி மணியவர்கள். இறைவரது இரவலர் கோலத்தின் பேரெழில் கண்டு பெருமயல்கொண்ட மங்கையர் கூற்றாக 'ஆரணீய விடங்கரே' என்ற மகுடமுடைய அருந்தமிழ்ப்பதிகத்தை இங்கு சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடியுள்ளார்.

வியாக்கிராசுரன் என்பான் புலிவடிவெடுத்து இறைவரை வழிபட்டான் என்றும் அவன் இறக்கும்போது தன் நினைவாக இவ்வூரில் உள்ள மலைக்கற்கள் புலிவரிகளைப் பெறவேண்டும் என்ற வரம்பெற்றான் என்றும் அவ்வண்ணம் இங்கே புலிவரிக்கற்கள் கிடைக்கின்றன என்றும் தலவரலாறு கூறு கிறது.

இத்தலத்துக்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருப் பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் ஒன்றும் அப்பரடிகள் திருப்பதிகம் ஒன்றும் ஆக மூன்று பதிகங்கள் உள்ளன.

விழுப்புரம் - திருச்சி இருப்புப்பாதையில் பிட்சாண்டார் கோயில் நிலையத்தினின்றும் சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 62-வது தலமான திருப்பாச்சிலாச்

சிராமத்தையடைந்து அங்கிருந்து சுமார் 6 கிலோமீட்டர் வடமேற்கே சென்றால் இத்தலத்தையடையலாம். திருவாளைக் காவிலிருந்து வடமேற்கே சுமார் 12கி. மீ. உள்ள மணச்ச நல்லூர் சென்று அங்கிருந்து மேற்கே சுமார் 3கி. மீ. சென்றும் இத்தலத்தையடையலாம். திருச்சியிலிருந்து இத்தலத்துக்குப் பேருந்துகள் வருகின்றன. கோயில் வாயிலில் பேருந்துகள் நிற்கும். எனவே இத்தலத்தை எளிதிலடைந்து தரிசிக்க லாம்.

இறைவர் திருப்பெயர்—நீலகண்டர், ஆரணீயவிடங்கர்; இறைவியரர் திருப்பெயர்—விசாலாட்சி, நீணெடுங்கண்ணி; தீர்த்தம் - தேவ தீர்த்தம்; தலவிருட்சம் - பைஞ்ஞீலி (வாழை யின் ஒரு வகை).

சிவம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் துதி

ஊழிமுத லொருபாகத் துமையளித்த
பரஞான உததி மாந்திப்
பாழியுறு பரசமயக் கோடையறச்
சைவநெடும் பயிர்க ளோங்க
வாழிமறைத் தமிழ்மறைபெய் மாமுகிலைப்
பாலரு வாய்ப்பூங் கன்றைக்
காழிவளர் மாமணியைக் கவுணியர்தங்
கற்பகத்தைக் கருத்துள் வைப்பாம்.

—மஹாவித்துவான் திரிசிரபுரம்
மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்.
(திருவாரூர் தியாகராசலீலை)

சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருஈங்கோய்மலை

பதிகவரலாறு:—திருப்பைஞ்ஞீலியில் பெருமானை வணங்கி மண்பரவுந் தமிழ்மாலை பாடிப் பிற தலங்களையும் தரிசிக்க மனம் வைத்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருஈங்கோய் மலையை அடைந்தார். அங்கு மரகதாசலர் என்ற திருநாமத் துடன் எழுந்தருளியிருக்கும் இறைவரை வணங்கிப்பாடிய இசைப்பதிகம் இது.

பண் - தக்கேசி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்தமலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவிபாகமாக்
கானத்திரவில் எரிகொண்டாடுங் கடவுள்உலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சாரல் ஈங்கோய்மலையாரே. 1

பதிகப் பொழிப்புரை:—1. உயர்ந்த வானத்தில் விளங்கும் குளிர்ச்சி பொருந்திய பிறைச்சந்திரன் தோய்கின்ற சடையின் மேல் ஊமத்தமலரைச் சூடி, தேனொத்த இனிய மொழியை யும் மானொத்த விழியையுமுடைய தேவியாரை ஒரு பாகமாகக் கொண்டு, நள்ளிரவில் காட்டில் திருக்கரத்தில் எரியுடன் ஆடும் கடவுள் (யாரெனில்) பன்றிகளின் கூட்டம் வந்து சேரும் சாரலையுடைய திருஈங்கோய்மலையில் உலகெலாம் ஏத்தும்படி கோயில் கொண்டருளிய சிவபிரானாரே யாவர்.

சூலப்படையொன் றேந்திஇரவிற் சுடுகாடிடமாகக்
கோலச்சடைகள் தாழக்குழல்யாழ் மொந்தைகொட்டவே
பாலொத்தனைய மொழியாள்காண ஆடும்பரமனார்
ஏலத்தொடுநல் இலவங்கமழும் ஈங்கோய்மலையாரே. 2

2. சூலம் என்னும் படையை ஏந்திக் கொண்டு நள்ளிரவில் சுடுகாடே இடமாகக் கொண்டு அழகிய சடைகள் கீழே தொங்கவும், மொந்தை என்னும் பறை கொட்டவும், பால் போலும் இனிய மொழி பேசும் உமாதேவியார் காணும் படியும் ஆடும் இறைவன் (யாவரெனில்) ஏலக்காயுடன் நல்ல இலவம் பூ மணம் வீசும் திருஈங்கோய்மலை என்னும் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானேயாவர்.

கண்கொள்நுதலார் கறைகொள்மிடற்றுர் கரியின்உரிதோலார்
விண்கொள்மதிசேர் சடையார்விடையார் கொடியார்வெண்ணீறு
பெண்கொள்திருமார் பதனிற்பூசும் பெம்மான்எமையாள்வார்
எண்கும்அரியுந் திரியுஞ்சாரல் ஈங்கோய்மலையாரே. 3

3. நெற்றியிலே கண்ணைக் கொண்டவரும், கழுத்திலே விஷத்தைக் கொண்டவரும், யானையின் உரித்த தோலை உடையாகக் கொண்டவரும், விண்ணில் உள்ளதொரு மதியைத் தலையில் சூடியவரும், விடை பொருந்திய கொடியைக் கொண்டவரும், தேவியாரை ஒரு பாகமாகக் கொண்ட திருமார்பில் வெண்ணீறு பூசும் பெருமானும், எம்மை ஆளாக உடையவரும் (யாவரெனில்) கரடிகளும் சிங்கங்களும் திரிகின்ற சாரலையுடைய திருஈங்கோய்மலையில் கோவில் கொண்டு அருளிய சிவபெருமானேயாவர்.

மறையின்னிசையார் நெறிமென்கூந்தல் மலையான்மகளோடும்
குறைவெண்பிறையும் புனலுந்நிலவுங் குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங் கழலும்ஆர்ப்பப் படுகாட்டெரியாடும்
இறைவர்சிறைவண் டறைபூஞ்சாரல் ஈங்கோய்மலையாரே. 4

4. வேதங்களின் இசை வடிவாய் இருப்பவரும், நெறித்துச் சுருண்ட மென்மையான கூந்தலையுடைய மலைமகளோடு கூடியவரும், வெண்மையான பிறைச்சந்திரனும் கங்கையும் தங்குகின்ற குளிர்ந்த அழகிய சடைகள் கீழே தொங்கவும், பறை குழல் முதலிய கருவிகள் முழங்கவும்

இவற்றோடு திருவடியில் அணிந்த கழல்கள் ஆரவாரம் செய்யவும் சுடுகாட்டிலே எரியுடன் ஆடுகின்ற இறைவரும் (யாவரெனில்) சிறகோடு கூடிய வண்டுகள் ஒலிக்கின்ற அழகிய சாரலையுடைய திருஈங்கோய்மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே யாவர்.

நொந்தசுடலைப் பொடிநீறணிவார் நுதல்சேர்கண்ணினார்
கந்தமலர்கள் பலவுந்நிலவு கமழ்புன்சடைதாழப்
பந்தண்விரலாள் பாகமாகப் படுகாட்டெரியாடும்
எந்தம்மடிகள் கடிகொள்சாரல் ஈங்கோய்மலையாரே. 5

5. அனைத்தும் அழிந்த சுடலையின் பொடியாகிற நீற்றினை அணிபவரும், நெற்றிக் கண்ணினை உடையவரும், மணம் மிக்க மலர்கள் பலவும் நிலவி மணம் வீசும் அழகிய புன் சடை கீழே தொங்க, பந்து அணையும் மெல்லிய விரலையுடைய உமாதேவியார் ஒரு பாகமாக இருக்க, சுடுகாட்டிலே எரியினை ஏந்தி ஆடும் எமது தலைவரும் (யாவரெனில்) மணம் வீசுகின்ற சாரலையுடைய திருஈங்கோய்மலையில் வீற்றிருக்கும் சிவபெருமான் ஆவர்.

நீரூர்அகலம் உடையார்நிரைபார் கொன்றையரவோடும்
ஆரூர்சடையார் அயில்வெங்கணையால் அவுணர்புரமூன்றும்
சீரூளரிசெய் தேவர்பெருமான் செங்கணடல்வெள்ளை
ஏரூர்கொடியார் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே. 6

6. திருநீறு பூசிய மார்பினை உடையவரும், வரிசையாகப் பொருந்திய கொன்றை, - பாம்பு இவற்றோடு கங்கை நதி பொருந்திய சடையை உடையவரும், கூர்மையும் வலிமையும் பொருந்திய அம்பினால் அசுரர்களின் மூன்று புறங்களையும் கோபித்து எரியும்படிச் செய்த தேவர்பெருமானும், சிவந்த கண்ணும் வலிமையும் உடைய வெள்ளை எருதினைக் கொடியாக உடையவரும் (யாவரெனில்) உமாதேவியாரோடு திருஈங்கோய்மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் ஆவர்.

வினையாயினதீர்த் தருளேபுரியும் விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேல் மதியஞ்சூடும் நம்பானலமல்கு
தனையார்கமல மலர்மேலுறைவான் தலையோடனலேந்தும்
எனையாளுடையான் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே 7

7. அடியார்களது வினைகளையெல்லாம் தீர்த்து அருளையே புரியும் விகிர்தனும், விரிந்த கொன்றை மலர்கள் நிறைந்த திருமுடியின் மீது பிறைச் சந்திரனைச் சூடும் நம்பனும், எல்லா நலன்களும் நிறைந்த ஒப்பற்ற தாமரை மலர மேல் உறை பவனாகிய பிரமதேவருடைய தலை ஓடு மற்றும் எரியினை ஏந்து பவனும் என்னை ஆளுடைய பெருமானும் (யாவரெனில்) உமாதேவியாரோடு திருஈங்கோய்மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஆவர்.

நம்பான்:—நம்பன், உயிர்களின் விருப்பத்திற்குரியவன்.

பரக்கும்பெருமை இலங்கையென்னும் பதியிற்பொலிவாய
அரக்கர்க்கிறைவன் முடியுந்தோளும் அணியார்விரல்தன்னால்
நெருக்கியடர்த்து நிமலாபோற்றி யென்றுநின்றேத்த
இரக்கம்புரிந்தார் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே. 8

8. பரந்த பெருமையுடைய இலங்கை என்னும் அழகிய பதியில் அரக்கர்களுக்குத் தலைவனாகிய இராவணனது தலை முடிகளையும், தோள்களையும் அழகிய தனது ஒரு விரலினால் நெருக்கி அடர்த்து (அதனால் மிகவும் துன்பமடைந்த அவன் தன் பிழையினை உணர்ந்து) "நிமலா போற்றி" என்று தோத்திரம் செய்ய அவனுக்கு இரக்கம் காட்டி அருளிய பெருமான் (யாவரெனில்) உமையாளோடு திருஈங்கோய்மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஆவர்.

வரியார்புலியின் உரிதோலுடையான் மலையான்மகளோடும்
பிரியாதுடனாய் ஆடல்பேணும் பெம்மான் திருமேனி
அரியோடயனும் அறியாவண்ணம் அளவில்பெருமையோ(டு)
எரியாய்நிமிர்ந்த எங்கள்பெருமான் ஈங்கோய்மலையாரே. 9

9. வரிகளையுடைய புலியின் உரித்த தோலை ஆடையாக உடையவனும், மலையரசன் மகளாகிய உமாதேவியாரோடு பிரியாது ஒரு பாதியனாய் உடனாகியிருந்து ஆடல் புரியும் பெருமானும், தனது திருமேனியை அரியோடு அயனும் அறியாத வண்ணம் அளவில்லாத பெருமையோடு அக்கினித் தூணாய் நிமிர்ந்து நின்றவனுமாகிய எங்கள் பெருமான் (யாவரெனில்) திருஈங்கோய்மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே ஆவார்.

பிண்டியேன்று பெயராநிற்கும் பிணங்குசமணரும்
மண்டைகலனாக் கொண்டுதிரியும் மதியில்தேரரும்
உண்டிவயிறர் உரைகள்கொள்ளா துமையோடுடனாகி
இண்டைச்சடையான் இமையோர் பெருமான் ஈங்கோய்மலையாரே

10. அசோகந் தளிர்களைத் தாங்கி இறைவன் உண்மையை ஏற்காது பிணங்கி நிற்கும் சமணர்களும், மண்டை என்னும் பாத்திரத்தைக் கலனாகக் கொண்டு பிச்சை ஏற்றுத் திரியும் அறிவில்லாத பௌத்தர்களும் உண்டு பருத்தவயிற்றை உடையவர்கள். இவர்களுடைய உரைகளை ஏற்றுக் கொள்ளாதீர். உமாதேவியாரோடு உடனாகி இண்டை மாலை தரித்த சடையினை உடையவனும் இமையோர் பெருமானும் திருஈங்கோய்மலையில் வீற்றிருக்கும் பெருமான் ஆவார். (அத்தகைய பெருமானை வணங்கி வாழ்வீராக என்று உலக மக்களை நெறிப்படுத்தியதாகக் கொள்க.)

விழவாரொலியும் முழவும்ஓவா வேணுபுரந்தன்னுள்
அழலார்வண்ணத் தடிகளருள்சேர் அணிகொள்சம்பந்தன்
எழிலார்சுனையும் பொழிலும்புடைசூழ் ஈங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல் பத்தும்வல்லார் கவலைகளைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. திருவிழாக்களின் ஒலியும், முழவு போன்ற வாத்தியங்களின் ஒலியும் என்றும் நீங்காது ஒலிக்கும் திருவேணுபுரம் என்னும் ஒரு பெயர் பெற்ற சீகாழியில் அழல் வண்ணத்து அடிகளாகிய சிவபெருமானின் அருளை அடைந்து அதனால் தெய்வ நலம் பெற்ற திருஞானசம்பந்தன். அழகு மிக்க சுனைகளும் பொழில்களும் புடைசூழ்ந்த திருஈங்கோய்மலையில் கோயில் கொண்ட சிவபெருமானின் திருவடிகளைத் துதித்துப் பாடிய பாடல்கள் பத்தும் பாடவல்லவர்கள் தங்களது மனக் கவலைகள் எல்லாம் களைவார்கள்.

தலவரலாறு:—திருஈங்கோய்மலை என்னும் இத்தலம் காவிரி வடகரைத் தலங்களுள் 63வதும் இறுதித்தலமுமாகும். தற்பொழுது திருவிங்கநாதமலை என வழங்கப்படுகிறது. அம்பிகை இத்தலத்தில் தவமியற்றி இறைவரை மணந்து கொண்டார். அகத்தியர் இத்தலத்துக்குத் தரிசிக்க வந்த போது அடியார் கூட்டம் மிக்கிருந்தமையால் தாம் வழிபட இயலாது ஈயின் உருவெடுத்து இறைவரைப் பூசித்தமையால் திருஈங்கோய்மலை என்ற பெயர்பெற்றது. மற்றும் திருமால் பிரமன், இந்திரன், இயமன், நவசித்தர்கள் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். ஈங்கோய்மலை இரட்டையாக இருப்பதால் சிவசக்தி வடிவம் என்று கூறுவர். இத்தலத்துக்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் மட்டும் ஒரு திருப்பதிகம் பாடியுள்ளார். நக்கீரதேவநாயனர் பாடிய ஈங்கோய் மலை எழுபது என்ற பிரபந்தம் 11-ம் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளது.

"காலைக்கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தித் திரு ஈங்கோய்மலை நாதர்" என்பது விளக்கமாய் வழங்கும் பழமொழி. (கடம்பர் - கடம்பந்துறை ஈசர், காவிரித் தென்கரையில் 2வது தலம்; சொக்கர் - திருவாட்போக்கி என்ற காவிரித் தென்கரை 1வது தலத்து இறைவர்) இம்மூன்று தலங்களையும் மேற்கூறியபடி தரிசிக்க நற்பலன் தருமென்ப'! (சிவக்கவிமணியவர்களின் தல விசேடக் குறிப்பு),

இத்தலம் திருச்சியிலிருந்து முசிறி வழியாகச் செல்லும் பேருந்து வழியில் முசிறிக்கு மேற்கே நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கரூர், குளித்தலை முதலிய ஊர்களி லிருந்து சேலம் செல்லும் பேருந்துகளும் இத்தலத்தின் வழி யாகச் செல்கின்றன. கோயில் மலைமீது உள்ளது. 500 படிகள் ஏறினால் மலைமேல் உள்ள கோயிலையடையலாம். இங்கு சிவலிங்கம் மரகதம் என்னும் பச்சை நிறக்கல்லால் ஆனது. மரகதத் திருமேனியின் பசுமை ஒளியை இன்றும் கண்டு களிக்கலாம்.

இறைவர் திருப்பெயர் - மரகதாசலேசுவரர்; இறைவி திருப் பெயர் - மரகதவல்லியார்; தீர்த்தம் - சர்ப்பநதி; தலவிருட்சம்- புளியமரம்.

உ

திருஈங்கோய்மலை எழுபது

(சில பாடல்கள்)

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும்பாய்ந் தேறி—நொடியுங்கால்
இன்ன தெனவறியா ஈங்கோயே ஓங்காரம்
அன்னதென நின்றான் மலை.

ஓடும் முகிலை உகிரால் இறவூன்றி
மாடுபுக வான்கை மிகமடுத்து—நீடருவி
மாச்சீயம் உண்டு மனங்களிக்கும் ஈங்கோயே
கோச்சீயம் காண்பரியான் குன்று.

கள்ள முதுமறவர் காட்டகத்து மாவேட்டை
கொள்ளென் றழைத்த குரல்கேட்டுத்—துள்ளி
இனக்கவலை பாய்ந்தோடும் ஈங்கோயேநந்தம்
மனக்கவலை தீர்ப்பான் மலை.

—நக்கீரதேவ நாயனார், 11ம் திருமுறை.

சிவம்.

உ
சிவமயம்
ஸ்ரீமஹாதேவஜயம்

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

பதிகவரலாறு—தேவர்கள் போற்றும் திருஈங்கோய் மலையில் மரகதாசலேசுவரரைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடித் துதித்தபின்னர் பிறபதிகளையும் தொழுது வணங்கி, கொங்கு நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள பல திருத் தலங்களையும் வணங்கிக்கொண்டு திருஞானசம்பந்தர் திருக் கொடிமாடச்செங்குன்றூர் என்னும் திருத்தலத்தைச் சென் றணைந்தார். அந்நகர மக்களும் சிவத்தொண்டர்களும் பெரு மகிழ்ச்சியுடன் நகரையலங்கரித்துப் பிள்ளையாரை எதிர் கொண்டு வணங்கித் துதித்துக் கூடியகரங்கள் தலைமீது பொருந்த இறைவர் எழுந்தருளிய திருக்கோயிலுக்கு அழைத்துக்கொண்டு சென்றனர். தமிழ் விரகராகிய சீகாழிப் பிள்ளையார் திருக்கோயிலினுள்ளே சென்று மாதிருக்கும் பாதியனை, நின்ற திருக்கோலம் (அர்த்தநாரீசுவரத்திரு மூர்த்தம்) கொண்டு விளங்கும் பெருமானின் திருமுன்பு வீழ்ந்து வணங்கியெழுந்து "வெந்தவெண்ணீறணிந்து" எனத் தொடங்கும் இன்னிசைவண்டமிழாம் இத்திருப்பதிகத்தினை மண்ணுலகத்தவரேயன்றி விண்ணுலகத்தவரும் போற்றும்படி பாடியருளினார்.

பண்-வியாழக்குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பின் நல்ல
பந்தண வும்விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழிற்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவார் அவலம் அறுப்பாரே. 1

பதிகப்பொழிப்புரை—:1. நன்குகத்தீயினில் வெந்து வெண்மை நிறம்பெற்ற திருநீற்றினையணிந்து, பூணூல்

திகழ்கின்ற திருமார்பில் நன்மையுடைய உமாதேவியார் ஒருபாகமாக அமர்ந்திருக்கக் கொத்துக் கொத்தாகப் பூக்கள் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த திருக்கொடிமாடச்செங் குன்றூரில் நிலையாக எழுந்தருளியிருக்கும் அந்தணனாகிய சிவபிரானை வழிபடுபவர்கள் தங்களுக்கு நேரும் துன்பங்கள் அனைத்தையும் அறுப்பார்கள்.

வெந்தவெண்ணீறு:—இங்கு இறைவரது திருக்கோலம் முழுமையும் வெண்மை நிறமுடைமை குறிப்பு. அது சங்காரத் தின் பின் அதன் நீறு அணிந்து உலகம் உளதாக மீள நினைத்து சிவமும் சத்தியுமாய் நின்ற திருக்கோலமாய் உள்ள தத்துவம் குறித்தது என்பதாம் (இப்பகுதி சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களது பெரிய புராணப் பேருரையில் இப்பதிக உரைக்குறிப்பினின்றும் எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது).

பந்தணவும் விரலாள் ஒருபாகமாக அமர்ந்தருளி:—அர்த்த நாரீசுவரர் என்ற திருநாமத்துடன் மாதிருக்கும் பாதியனாக இங்கு இறைவனார் எழுந்தருளியிருக்கும் குறிப்பு. தலவிசேட மும் காண்க.

அந்தணன்:—அழகிய தண்மையை உடையவன். அல்லது ''தேவேஷு த்வம் ப்ராம்மணோஸி'' (தேவர்களில் நீர் பிராம் மணராய் இருக்கின்றீர்) என்ற ஸாமவேத சதபத ப்ராம்மணத் தின் கருத்தைக் கூறியதுமாம்.

அலைமலி தண்புனலோ டரவஞ் சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான் மலையார் இளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்நின்ற
தலைமக னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. 2

2. அலைகள் மலிந்த தண்புனலான கங்கையோடு பாம்பைச் சடையிலணிந்து, திருமார்பிலே மலைமகளாகிய உமாதேவியாரை ஒரு கூறாக உடையவனும், மலைகளிலே

விளைகின்ற இளவாழைக்குலைகளை மிகுதியாகவுடைய சோலைகள் சூழ்ந்த திருக்கொடிமாடச்செங்குன்றூர் என்னுமித்தலத்தில் நிலையாக எழுந்தருளியுள்ள தலைமகனுமாகிய சிவபெருமானைத் தொழுபவர்கள் தடுமாற்றங்களைத் தகர்த்து எறிவார்கள்.

தலைமகன்:—தலைவன். எல்லாப் பொருள்களும் தோன்றுவதற்கு ஆதியாயிருத்தலின் தலைமகன் என்றார்.

பாலன நீறுபுனை திகழ்மார்பிற் பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கோல மலர்ப்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மல்கும்
நீலநன் மாமிடற்றன் கழலேத்தல் நீதியே. 3

3. பால் போன்ற வெண்மையான திருநீறு பூசித்திகழ்கின்ற திருமார்பில் பலவளையல்களையணிந்த திருக்கரங்களையுடைய நல்ல ஏலமலர்க்குழலாள் ஒரு பாகமாக அமர்ந்திருக்க, அழகிய மலர்ச் சோலைகள் சூழ்ந்த திருக்கொடிமாடச் செங்குன்றூரில் கோயில் கொண்டருளியிருக்கும் நீலகண்டனாகிய சிவபெருமானின் திருவடிகளை வணங்குதலே மக்கள் செய்யவேண்டிய முறையான செயலாகும்.

ஏலம் - மயிர்ச்சாந்து. இச்சாந்துபூசி, மலர்களையும் தரித்த குழலாள் என்பது 'ஏலமலர்க்குழலாள்' என்பதன் பொருளாகும். இறைவியாருக்கு ஏலவார்க்குழலி என்ற திருநாமமும் உளது.

நீலநன்மாமிடற்றன்:—நீல நிறமும், நன்மை செய்யும் தன்மையும் அழகியதுமான திருமிடற்றினையுடைய சிவபிரான். விஷம் உண்டு அதனால் தேவர்களைக் காப்பாற்றியதாதலின் நன்மிடறு என்று கூறியருளினார்.

வாருறு கொங்கைநல்ல மடவாள் திகழ்மார்பில் நண்ணும்
காருறு கொன்றையொடுங் கதநாகம் பூண்டருளிச்
சீருறு மந்தணர்வாழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான் கழலேத்தல் நீதியே. 4

4. கச்சணிந்த கொங்கைகளையுடைய நல்ல மடவாளாகிய உமாதேவியார் ஒரு பாகமாகத்திகழும் திருமார்பில் கொன்றை மாலையோடு சினம்மிக்க பாம்பையும் அணிந்தருளிச் சிறப்புமிக்க அந்தணர்கள் வாழ்கின்ற திருக்கொடி மாடச்செங்குன்றூரில் நிலையாக எழுந்தருளியுள்ளவரும், கங்கை தங்கும் சிவந்த சடைமுடியினையுடையவருமான சிவபிரானுரது திருவடிகளை ஏத்துதலே (மானிடர் செய்யத்தக்க) நியாயமான செயலாகும்.

நல்ல மடவாள்—அழகும் இளமையும் உடையவர் என்பதாம். இவ்வாறின்றி மகடூஉக் குணங்களில் ஒன்ருய மடம் என்னும் அறியாமையை உடையாள் என்று கூறலாமோவெனின், கூறலாகாது. என்னை? அம்மையார் ஞானமே தன் வடிவாக உடையவர் ஆகலின். ''சக்தி தன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்'' (சிவஞானசித்தியார் சுபக்கம்-62) என்பதும் காண்க. மடவாள் என்பதற்கு மனைவி என்றெரு பொருளும் அகராதிகளில் காணப்படுகிறது.

பொன்திகழ் ஆமையொடு புரிநூல் திகழ்மார்பின் நல்ல
பன்றியின் கொம்பணிந்து பணைத்தோளியோர் பாகமாகக்
குன்றன மாளிகைசூழ் கொடிமாடச் செங்குன்றூர் வானில்
மின்திகழ் செஞ்சடையான் கழலேத்தல் மெய்ப்பொருளே. 5

5. பொலிவுடன் விளங்கும் ஆமையோடு, முப்புரிநூல் இவை திகழும் மார்பில் பன்றியின் கொம்பையும் அணிந்து உமாதேவியார் ஒரு பாதியாகக் குன்றுகள் போல் உயர்ந்த மாளிகைகள் சூழ்ந்த திருக்கொடிமாடச்செங்குன்றூரில், வானில் தோன்றும் மின்னலையொத்து விளங்கும் செஞ்சடையானுகிய சிவபிரானுரது திருவடிகளை யேத்துதலே மோட்சத்தையடைவிக்கும் சாதனமாகும்.

பொன் திகழ் ஆமையோடு: —'பொன்' என்பதற்குத் திருமகள் எனப்பொருள் கொண்டு திருமகள் விளங்குகின்ற

திருமாலாகிய ஆமையின் ஓடு எனப்பொருள் உரைத்தனர் திருத்தருமையாதீனக் குறிப்புரையாசிரியர். பன்றியின் கொம்பு என்பதற்கும் இவ்வாறே திருமாலாகிய பன்றியின் கொம்பு எனக்கொள்க.

பணைத்தோளி:—மூங்கிலைப் போன்ற தோளுடையாள்.

மெய்ப்பொருள்:—மெய்ம்மை என்னும் சொல் உண்மை என்ற பொருளைத்தரும். பொருள் என்னும் சொல்லுக்குரிய பொருள்களில் மோட்சம் என்ற பொருளும் காணப்படுவதாலும், மோட்சமொன்றே உண்மையான பேறு ஆகையாலும் அங்ஙனமே பொருள் கொண்டோம். சிவபிரானது திருவடி ஏத்துதல் அதனையடையும் சாதனம் என்பது பிள்ளையாரது திருவுள்ளக் கருத்தாகக் கொள்ளப்பட்டது.

ஓங்கிய மூவிலைநற் சூல மொருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியஞ் சடைக்கணிந்து
கோங்கண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள்தொழுவார் வினையாய பற்றறுமே. 6

6. தூக்கிப்பிடித்த சிறந்தமுத்தலைச் சூலத்தை ஒரு கையிலேயுடையவனும் சென்னியிலே தாங்கிய கங்கையோடு மரங்கள் செறிந்த பொழில்கள் சூழ்ந்த திருக்கொடிமாடச் செங்குன்றூர் பொருந்தியிருந்து (அடியார்கட்கு) தோழன் போன்று உற்றுழி உதவும் சிவபிரானது திருவடிகளைத் தொழுபவர்களது வினைப்பற்று நீங்கும்.

நீடலர் கொன்றையொடு நிமிர்புன் சடைதாழ வெள்ளை
வாட லுடைதலையில் பலிகொள்ளும் வாழ்க்கையனுய்க்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
சேடன தாள்தொழுவார் வினையாய தேயுமே. 7

7. மாலைபோன்று நீண்டு மலர்கின்ற கொன்றைப் பூக்களோடுகூடிய நீண்ட புன்சடை தாழ, உலர்ந்த வெண் தலையில் பிச்சைகொள்ளும் வாழ்க்கையனுய், செங்காந்தளின் வளம் பொருந்திய குறிஞ்சி நிலத்தில் திருக்கொடிமாடச்

செங்குன்றூரில் நிலையாக எழுந்தருளியிருக்கும் பெருமையுடைய சிவபிரானது தாள்களைத் தொழுபவர்களுடைய வினைகள்யாவும் தேய்ந்துபோகும்.

புன்சடை—பொன் சடை. இதுபற்றிமுன்னர் உரைத்தவையும் கொள்க (த. மா. 2 - பக்கம் 20; த. மா. 5 - பக்கம் 21). புன்மை என்றே கொண்டு 'சடைக்குப்புன்மை உலகினரால் விரும்பிக் கொள்ளப்படாமை' என்று உரைத்தார் தருமையாதீனப் புலவர், சித்தாந்தக்கலைமணி, வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள். (தருமையாதீனக்குறிப்புரை, 6ம் திருமுறை, 9ம் பதிகம், 7ம் பாடல் உரை). இவ்வாறின்றி இறைவரது திருச்சடைக்கு 'இயல்படை' என்று கொள்ளினும் அமையும்.

கோடல்—செங்காந்தள். குறிஞ்சி நிலப்பூ. சேடன் - பெருமையுடையவன்,

புறவு—குறிஞ்சி நிலம். இச்சொல்லுக்கு காடு என்ற பொருளும் உளதாயினும் கோடல் என்ற குறிஞ்சி நிலப்பூவின் வளம் குறிப்பிடப்பட்டதால் குறிஞ்சி நிலம் என்றே இங்குப் பொருள் கொண்டோம். திருக்கொடிமாடச்செங்குன்றூர்மலை சார்ந்த இடமாதலும் கருதுக.

மத்தநன் மாமலரும் மதியும்வளர் கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடைமேல் துதைய உடன்சூடிக்
கொத்தலர் தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்மேய
தத்துவ னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. 8

8. ஊமத்தையின் அழகிய மலரும் பிறைச்சந்திரனும் கொத்தாக மலர்கின்ற கொன்றைப்பூக்களின் மாலையோடு சிவந்த சடைமேல் செறிந்திருக்கும்படி சூடியவராய், கொத்துக் கொத்தாகப் பூக்கள் மலர்கின்ற குளிர்ச்சி பொருந்திய பொழில்கள் சூழ்ந்த திருக்கொடிமாடச்செங்குன்றூரில் பொருந்தி எழுந்தருளிய மெய்ப்பொருளான சிவபிரானைத் தொழுபவர்கள் தங்கள் மனக்கவலைகளை மாற்றிக் கொள்ளுவார்கள்,

தத்துவன்: — மெய்ப்பொருளானவன். உபநிடதங்களில் கூறப்படும் ஸத் எனப்படும் பரம்பொருள். அஃதாவது காலம், இடம், மற்று வேறு எவ்வகையாலும் மாறுபாடடையாது என்றும் ஒரே தன்மையாயுள்ளவன் என்பதாம். தடுமாற்றம்— மனக்கவலைகள்.

செம்பொனின் மேனியனும் பிரமன்திரு மாலுந்தேட நின்ற
அம்பவ ளத்திரள்போல் ஒளியாய ஆதிபிரான்
கொம்பண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய
நம்பன தாள்தொழுவார் வினையாய நாசமே. 9

9. செம்பொன் போலும் நிறமுடைய மேனியனாகிய பிரமதேவனும், திருமாலும் தேடும்படி அழகியசெம்பவளத் திரள் போன்று ஒளிவடிவாய் நின்ற ஆதிப்பிரானும், மரக்கிளைகள் செறிந்த சோலைகள் சூழ்ந்த திருக்கொடிமாடச்செங்குன்றூரில் விரும்பியெழுந்தருளிய நம்பனுமாகிய சிவபிரானது திருவடிகளைத் தொழுபவர்களுடைய வினைகள் யாவும் நாசமடையும்.

போதியர் பிண்டியரென் றிவர்கள் புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரைகேட் டுழல்வீர் வரிக்குயில்கள்
கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
வேதிய னைத்தொழநும் வினையான வீடுமே. 10

10. பௌத்தர்கள், சமணர்கள் எனப்படும் இவர்களுடைய புறவுரைகளாகிய பொய்ந் நூல்கள் ஓதுகின்ற கட்டுரைகளைக் கேட்டு (அவற்றை மெய்யென நம்பி) உழலும் மக்களே! (அவற்றைக் கொள்ளாது) வரிக்குயில்கள் (தளிர்களை மூக்கால்) கோதி உண்ணுகின்ற குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருக்கொடிமாடச்செங்குன்றூரில் நிலையாக எழுந்தருளிய வேதியனாகிய சிவபிரானது திருவடிகளைத் தொழுவீராயின் உமது வினையாயின யாவும் உம்மைவிட்டு நீங்கும். (இதனால் புத்தர் சமணர் ஆகியோரது பொய்ந்நூல்களை

ஏற்றுக்கொண்டு அவை வழி ஒழுகின் வினைகள் மிகுமே யன்றி ஒழியா எனக் குறிப்பினால் உணர்த்தியருளிவாறு கண்டு கொள்க).

கட்டுரை:—கட்டிச் சொன்ன பொய்யுரை, "கலகமிடும் அமண் குண்டர் பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணியை..." என்ற உமாபதி சிவாசாரியார் வாக்கும் ஈண்டு கருதற் குரியது. (திருத்தொண்டர் புராண வரலாறு).

வேதியன்:—வேதங்களை அருளியவன், வேதங்களின் பொருளானவன்.

அலைமலி தண்புனல்சூழ்ந் தழகார் புகலிந்நகர் பேணும்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச் செங்குன்றூர் ஏத்தும்
நலமலி பாடல்வல்லார் வினையான நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

11. அலைகள் மலிந்த குளிர்ச்சி பொருந்திய நீர் நிலைகள் சூழ்ந்து (அதனால்) அழகுடன் விளங்கும் திருப்புகலியென்னு மொரு பெயர் படைத்த சீகாழியைப் போற்றுதல் செய்யும் தலைமகனாகிய தமிழ் ஞானசம்பந்தன், கொல்லும் தொழில் மலிந்த முத்தலைச் சூலப்படையானாகிய சிவபிரான் எழுந் தருளியுள்ள திருக்கொடிமாடச்செங்குன்றூர் என்னுமித் தலத்தை ஏத்திய நன்மைகள் மலிந்த திருப்பாடல்களைப் பாட வல்லவர்களுடைய வினைகளானவை எல்லாம் நாசமாகும்.

தலைமகன்—தலையாய மகன்,முதன்மை ஸ்தானம் பெற்ற மகன். நிலவுலகில் அம்மையளித்த ஞானப்பாலுண்டு மகன் முறைமை பெற்றவர் இவரன்றி வேறொருவர் இன்மையால் தலைமகன் என்று கூறினார் என்று கொள்க.

கொடிமாடச்செங்குன்றூர் ஏத்தும் பாடல் என்றருளிச் செய்தனரேனும், அத்தலத்து மேவிய கொலைமலி சூலப்படை யானை ஏத்துதலே கருத்தாமெனக் கொள்க.

தலவரலாறு:—கொங்கு நாட்டுத் திருத்தலங்கள் ஏழனுள் நான்காவதாக வைத்து எண்ணப்படுவது திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்று வழங்கி வந்து தற்காலம் திருச்செங் கோடு எனப் பிரசித்தியுடன் விளங்கும் தலமாகும். இத்தலத் தில் சிவபிரான மாதியலும் பாதியனுக அர்த்தநாரீசுவரன் என்ற திருநாமத்துடன் எழுந்தருளியுள்ளார். இது பெருமா னுக்கேயன்றி அவர்தம் திருக்குமாரன் முருகனுக்கும் உகந்த தலமாகும். "சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான் முகனே" என்று அருணகிரியார் பாடியவாறு இத்தலத்தில் முருகக்கடவுள் பேரெழிலோடு விளங்குகின்ருர். இங்குள்ள மலை செந்நிறமாக இருப்பதால் செங்கோடு (கோடு-மலை) எனவும் பாம்பின் வடிவமாகத் தோற்றமளிப்பதால் நாகாசலம் (அசலம்-மலை) எனவும் பெயர் பெறும். ஆலயம் பெரிய உயரமான மலையில் இருக்கிறது.

இத்தலத்தின் தனிச்சிறப்பு மூலஸ்தானத்தில் சிவலிங்கம் இல்லாது இறைவர் அர்த்தநாரீசுவரனுக (அம்மை-அப்பனுக) ஒரே வடிவத்தில் ஓர் ஆள் உயரத்தில் காட்சியளிப்பதாகும். திருவுருவத்தின் நிறம் வெண்மை கலந்து காணப்படுகிறது. திருஞானசம்பந்தப் பிள்ளையார் இத்தலப்பதிகத்தில் ஐந்து பாடல்களில் இறைவர் இறைவியைப் பாகங்கொண்டு எழுந் தருளியுள்ள சிறப்பைப் பாடியுள்ளார். இத்திருக்கோலத்தை மாணிக்கவாசக சுவாமிகள் "தொன்மைக் கோலம்" என்று பாடியுள்ளார். அத்திருப்பாடலைக் கீழே காண்க.

தோலும் துகிலும் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கி குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

—திருவாசகம், திருக்கோத்தும்பீ, 18.

இத்தலத்தில் நாகம் (ஆதிசேடன்) பிரமன், விட்டுணு, துர்க்கை, கந்தர், உபமன்யு முனிவர், பிருங்கிரிஷி ஆகியோர் பூசித்த வரலாறுகளும் உள. திருஞானசம்பந்தப் பெருமான் குளிர்சுரம் நீங்கப்பாடிய பெருமையும் இத்தலத்துக்கு உள்ளது. மகப்பேறு முதலிய வரங்கள் தரும் வறடிக்கல் (வந்திய பாஷாணம்) என்ற சிகரம் ஒன்றும் வழிபடப்படுகிறது.

கிருஷ்ணகிரி பேராசிரியர் டாக்டர் பெ. கு. வரதராசன் அவர்களது அர்த்தநாரீசுவரர் திருப்பதிகம் என்ற நூலில் கூறப்பட்டுள்ள தலச்சிறப்பாவது:—இத்தலத்து இறைவர் சஞ்சீவி என்று குறிப்பிடப்படுகிறுர். (இதற்கு ஆதாரம் "செம்மையுடன் அங்குன்ருதோங்கு மணிகொள் கொடிமாடச் செங்குன்றூர் வாழும் சஞ்சீவியே" என்ற விண்ணப்பக் கலி வெண்பாவின் பகுதியாகும்) சஞ்சீவி என்ருல் உயிர் காக்கும் மருந்து எனப்பொருள்படும். இத் தமிழ்நாட்டில் மூலிகைப் பொருளாலான (அஃதாவது நவபாஷாணத்தால்) இறைத் தலங்கள் இரண்டுள, நவபாஷாணமும் இருவகைப்படும். 1) சுவேதம் எனப்படும் வெண்மை 2) கிருஷ்ணம் எனப்படும் கருமை, பழநியம்பதியின் இறைவர் கிருஷ்ண நவபாஷாணத்தால் ஆனவர். திருச்செங்கோட்டு இறைவனே சுவேதம் எனப்படும் வெள்ளைப் பாஷாணத்தால் ஆனவர், அந்த அர்த்தநாரிப் பெருமானுக்கு உச்சிக்கால அபிடேகம் மட்டும் தான் உண்டு. எண்ணெய்க் காப்பு இல்லை. பழநி முருகன் மீதும் திருச்செங்கோடு இறைவன் மீதும் அபிடேகிக்கப்பட்ட பொருள்களை உட்கொண்டால் நம்முடற்பிணிகள் தீருவது திண்ணம். மாளயபட்ச அமாவாசைக்கு முன் 21ம் நாளன்று 21 வகை மலர்கள், 21 வகை கனிவகைகள், 21 வகை நைவேத்தியங்கள் இவற்றுடன் வழிபாடு நடைபெறுகிறது. அந்த அமாவாசையன்றுதான் உமாதேவியாருக்கு ஈசன் இடப்பாகம் தந்தருளியதாக ஐதீகம், கார்த்திகை தீபவிழா, வைகாசி விசாகப்பெருவிழா இவை மிகச் சிறப்பானவை.

இத்தலத்தில் 108 தீர்த்தங்கள் இருப்பதாகவும் ஐதீகம் இறைவர் திருப்பாதத்தில் இன்றைக்கும் நீரூற்று உண்டு. இறைவரது திருவடி "நீரூறு பாதம்" என அழைக்கப்படுகிறது.

இத்தனைச் சிறப்புகள் பெற்ற இத்தலத்துக்குத் திருஞானசம்பந்தரது தலப்பதிகம் ஒன்றும் பொதுப்பதிகமான திருநீலகண்டப்பதிகம் ஒன்றும் ஆக இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன. இத்தலம் சங்ககிரி துர்க்கம் என்ற இரயில் நிலையத்தினின்றும் தென்கிழக்கில் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவிலும் ஈரோட்டிலிருந்து பேருந்துப் பாதையில் சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இறைவரும் இறைவியும்:—அர்த்தநாரீசுவரர் (மாதிருக்கும் பாதியன்); தீர்த்தம்: - குமார தீர்த்தம், நாகதீர்த்தம், சிவதீர்த்தம் முதலியன; தலவிருட்சம்: - இலுப்பைமரம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் துதி

சங்கமணிக் குழைதயங்கத் தழைந்தகாதுந்
தனிவிடையு முதலபல தணப்பில்காட்சி
பொங்குமடை யாளங்கள் புகன்றுபோற்றிப்
பொருவிறந்த பரஞ்சுடரைப் புந்திக்கெட்டா
அங்கணனை வழுதியுடல் வெப்புநீங்க
அணிதிகழ்வெண் திருநுண்தூள் அள்ளிச்சாத்துஞ்
செங்கைவிரல் கொடுகுறித்துத் தெரிக்குந்தோன்றல்
சிற்றடியின் பெருந்தன்மை சிந்தைசெய்வாம்.

—நிரம்பவழகிய தேசிகர்
(சேதுபுராணம்)

சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருநணா

(பவாநிகூடல்)

பதிகவரலாறு:-திருக்கொடிமாடச்செங்குன்றூரில் அர்த்த நாரீசுவரன் என்னும் மாதிருக்கும் பாதியனை வணங்கிப் பதிகம்பாடி மகிழ்ந்து, கொங்கு நாட்டின் பிறபதிகளையும் வணங்கும் ஆர்வத்துடன் திருநணா சென்று இறைவனை இறைஞ்சிப் பரவிப்பாடியது இத்திருப்பதிகம்.

பண்—காந்தாரம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
அந்தார் அரவணிந்த அம்மா னிடம்போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு பாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமா கனியுதிர்க்கும் திருநணாவே.

பதிகப் பொழிப்புரை:-1. பந்து வந்து அணையும் திருக்கை விரல்களையுடைய உமாதேவியார் ஒருபாகமாக இருக்க, பாம்பினை அணியாகப் பூண்டு, விடையின் மீதேறி அழகிய மாலையாகப் பாம்புகளையணிந்த இறைவனது இடம் (எது வெனில்) அழகும் குளிர்ச்சியுமுடைய மலைச்சாரலினின்றும் வந்து பொருந்தும் மடமையுடைய குரங்குகள் கூத்தாட, நீண்ட பொழில்களில் வண்டுகள் பாடச் சிவந்த தேனின் தெளிவு ஒளி செய்யத் தித்திக்கும் மாமரங்கள் கனிகளை உதிர்க்கும் திருநணா என்னும் இத்தலமேயாகும்.

மந்தி—பெண்குரங்கு; இங்கு குரங்குப் பொதுமையைக் குறித்தது. செந்தேன் தெளி ஒளிர—மாமரங்கள் கனிகளை உதிர்க்கும் போது அவைகளினின்றும் சிந்தும் தேனைக் குறித்தது.

"கூத்தாடல் கண்டும் பாடல் கேட்டும் மாமரங்கள் கனி உதிர்க்கும் என்பது தற்குறிப்பேற்றமுள்ளுறுத்தி நாடகச் சுவைபட வந்த உருவகக் குறிப்பு. அம்மான் இவ்வாறு வரையாது அருள் வழங்குமிடம் என்பது குறிப்பு (சிவக்கவி மணி அவர்களின் பதிகப் பாட்டுக் குறிப்பு).

வந்து என்பதற்குக் காற்று என்னுமொரு பொருளும் உளது. இதற்கு, மலைச்சாரலின் காற்று பொருந்திய வார் பொழிலில் மடமந்தி கூத்தாட வண்டுபாடச் செந்தேன் தெளி யொளிர தேமா கனி உதிர்க்கும் திருநணா என்று பொருள் கொள்க.

நாட்டம் பொலிந்திலங்கு நெற்றியினான் மற்றொருகை
வீணையேந்தி
ஈட்டுந் துயரறுக்கும் எம்மான் இடம்போலும் இலைசூழ்கானில்
ஓட்டந் தருமருவி வீழும் விசைகாட்ட முந்தூழோசைச்
சேட்டார் மணிகள் அணியுந் திரைசேர்க்கும் திருநணாவே. 2

2. பொலிவுடன் கண் ஒன்று விளங்கும் திருநுதலை யுடையவரும், ஒரு கையில் வீணை ஏந்தி உயிர்க்கூட்டங்கள் ஈட்டும் வினைகளின் பயனாகிய துன்பங்களை அறுப்பவருமாகிய எமது பெருமானது இடம் (எதுவெனில்) இலைகள் அடர்ந்த மரங்கள் நிறைந்த காட்டில் ஓடுதலைச் செய்கின்ற அருவி மலையினின்றும் விழும் விசையை (அதனால் அலைக்கப்படும்) மூங்கிலின் ஓசைகாட்ட, ஒளிபொருந்திய மணிகளை, அவை களை அணிபோல் கொண்ட அலைகள் திரட்டிச் சேர்க்கின்ற திருநணாவாகும்.

ஈட்டுந்துயர்—பழவினையின் காரணமாய்ப் பிறந்த உயிர் இப்பிறப்பில் ஈட்டும் வினையால் உண்டாகும் துன்பம். வினை வழியால் வரும் துன்பத்தை அறுக்கும் எனவும் கொள்ளலாம்.

முந்தூழ்—மூங்கில். முந்தூழோசை-இதற்கு "எல்லா ஓசை களிலும் முந்தி நிற்கும்படி ஆற்றின் கரைகளைச் சிதைக்கும்

ஓசை'' என்று பொருள் கொண்டார் புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனுர். சேட்டார் மணிகள் - சேடு ஆர் மணிகள் - அழகு பொருந்திய மணிகள் - மணிகட்கு அழகுதருவது ஒளியேயாகலின் ஒளி எனப்பொருள் உரைக்கப்பட்டது. அணியும் திரை - தன்மேல் வரிசையாகத் திகழ்தலால் அணி யாகக் கொண்டிருக்கும் அலைகள். நீரின்மீது மணிகள் படர்ந் திருத்தலை அணி புனைந்திருப்பதாகக் கூறினுர்.

நன்ருங் கிசைமொழிந்து நன்னுதலாள் பாகமாய் ஞாலமேத்த
மின்தாங்கு செஞ்சடையெம் விகிர்தர்க் கிடம்போலும்
விரைசூழ்வெற்பில்
குன்ருேங்கி வன்திரைகள் மோத மயிலாலுஞ் சாரற்செவ்வி
சென்ருேங்கி வானவர்களேத்தி யடிபணியுந் திருநணுவே. 3

3. நன்ருக இசையுடைய வேதங்களைத் தோற்றுவித் தருளியும், அழகிய நெற்றியையுடைய உமாதேவியார் ஒரு பாகமாக இருக்கவும் உலகத்தவர் எல்லாம் துதிக்கும்படி மின்னலை யொத்த செஞ்சடையைத் தாங்கும் விகிர்தராகிய எம் சிவபிரானுரது இடம் (யாதெனில்) மணம் நிறைந்த மலையில் குன்றுகளைப் போல் ஓங்கியெழும் வலிய அலைகள் மோத, மயில்கள் ஆடுகின்ற சாரலின் செவ்வி ஓங்கியிருக்கத் தேவர்கள் துதித்துப் பாடி எம்பிரானது திருவடிகளை வணங்கும் திருநணு என்னுமித்தலமேயாகும்.

இசை—எடுத்தல், படுத்தல், நலிதல் ஆகிய ஓசையுடன் கூடிய வேதம். மற்றும், ஈசனே அனைத்துக் கலைகளுக்கும் தலைவராதலால், சங்கீதம் எனப்படும் இசைக்கலையைத் தோற்றுவித்தலையும் கொள்க.

சாரல் செவ்வி—மலைச்சாரலின் அழகு; இது சென்ருேங்கு தலாவது, ஏனைய எல்லாச் செவ்விகளையும் கடந்து ஓங்கி நிற்றலாம்.

கையில் மழுவேந்திக் காலிற் சிலம்பணிந்து கரித்தோல்கொண்டு
மெய்யில் முழுதணிந்த விகிர்தர்க் கிடம்போலு மிடைந்துவானோர்
ஐய அரனே பெருமான் அருளென்றென் றுதரிக்கச்
செய்ய கமலம் பொழில்தே னளித்தியலுந் திருநணாவே. 4

4. ஒரு திருக்கரத்தில் மழுவை ஏந்தியும், திருவடியில் சிலம்பணிந்தும், யானைத்தோலை திருமேனி முழுமையும் போர்த்திக் கொண்டவருமான சிவபிரானரது இடம் (யாதெனில்) வானவர் கூட்டம் நெருங்கிவந்து "ஐயனே! அரனே! பெருமானே! அருள் புரிவாய்" எனவிருப்பத்துடன் போற்றுதல் செய்து நிற்கவும், செந்தாமரை மலர்களும் பொழில்களும் தேனைச் சொரிதலும் கூடிய திருநணா என்னு மித்தலமேயாகும்.

மிடைதல்—நெருங்குதல்; மிடைதல் என்ற சொல்லுக்கு 'வருந்துதல்' என்ற பொருளும் உண்மையால் தேவர்கள் துன்பம் வந்த காலத்து இறைவரையடைந்து காக்க வேண்டு மென்று முறையிடுதலையும் கொள்க.

செய்ய கமலமும் பொழிலும் செந்தேன் சொரிவது போல இறைவரும் தன்னையடைந்தார்க்குத் திருவருளைச் சொரி கின்றார் என்ற குறிப்பும் கொள்க. ஏனைய பாடல்களிலும் இவ்வாறே உய்த்துணர்ந்து கொள்க.

முத்தேர் நகையா ளிடமாகத் தம்மார்பில் வெண்ணூல்பூண்டு
தொத்தேர் மலர்சடையில் லவத்தா ரிடம்போலுஞ் சோலைசூழ்ந்த
அத்தேன் அளியுண் களியா லிசைமுரல ஆலத்தும்பி
தெத்தே யெனமுரலக் கேட்டார் வினைகெடுக்குந் திருநணாவே. 5

5. முத்தினைப் போலும் பற்களையுடைய உமாதேவியார் திருமேனியின் இடது பாகத்திலிருக்கத் தமது திருமார்பில் வெண்மையான பூணூலை அணிந்து, கொத்துக்கொத்தாகப் பூக்கும் கொன்றைப்பூ மற்றும் பிறமலர்களையும் சூடிய

பெருமானது இடம் (யாதெனில்) சோலைகளில் சூழ்ந்த தேனை வண்டுகள் உண்ட களிப்பினால் இசைமுரன்று ஒலி செய்யத் தும்பிகள் 'தெத்தே' என முரலுகின்றதும், (பெயரைக்) கேட்டவர்களுடைய வினைகளைக் கெடுப்பதுமாகிய திருநணா என்னும் இத்தலமேயாகும்.

அளி — வண்டுப் பொதுமை. தும்பி — ஆண் வண்டு. தெத்தே — வண்டுகள் முரலும் ஒலிக்குறிப்பு. தெத்தே— தெவ்வுக்கு எல்லாம்; தேவதேவன் என்பது உட்குறிப்பு. (சிவக்கவிமணி)

வண்டு 'இசைபாட' என்பதில் 'இசை' என்பதை இறை வரது புகழ் எனக்கொண்டும், 'தெத்தே' என்பதை தேவ தேவன் எனக் கொண்டும், இவ்வொலிகளைக் கேட்டவர் களுடைய வினைகளைக் கெடுக்கும் 'திருநணா' என்றும் கொள்ளலாம்.

வில்லார் வரையாக மாநாகம் நாணாக வேடங்கொண்டு
புல்லார் புரமூன் றெரித்தார்க் கிடம்போலும் புலியுமானும்
அல்லாத சாதிகளு மங்கழற்மேற் கைகூப்ப அடியார்கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல வருள்புரியுந் திருநணாவே. 6

6. மேருமலை வில்லாகப் பொருந்த, பெரிய பாம்பாகிய வாசுகி வில்லின் நாணாக அமையப் போர்க்கோலம் பூண்டு பகைவர்களது முப்புரங்களையும் எரித்தவராகிய சிவபிரானது இடம் (யாதெனில்) புலி, மான் மற்றும் இவையல்லாத விலங்குகளும், இறைவருடைய திருவடிகளைக் கைகூப்பித் தொழ (அவைகளுக்குப்), அடியார்கள் கூடி வழிபட (அவர் களுக்கும்) செல்லுதற்கரிய வீட்டு நெறியை அருளும் திருநணா என்னும் இத்தலமேயாகும்.

இரண்டுமூன்ருவது அடிகளுக்குப் புலியும் மானும் அவை அல்லாத சாதிகளும் அங்கழன்மேற் கைகூப்பித் தொழுதலே

யன்றி, அடியார்கட்கு அச்சம் முதலியன உளவாகாவண்ணம் அவர்கள் செல்லாத வேறுவழியிலே செல்கின்றன என்றும் கொள்ளலாம். (இது தருமையாதீனக் குறிப்புரையைத் தழுவியது)

செல்லா அருநெறிக்கே செல்ல அருள்புரியும்—மும்மல வயப்பட்டார் சென்று அடையாத அரிய நெறியாகிய வீட்டு நெறியில் தன்னை வணங்குவார் பயிலுதற்குச் சத்தி நிபாதத்தை அருளும் திருநணா. (திரு. பி. மா. சோமசுந்தரனார் உதவிய குறிப்புரை).

காணார் களிற்றுரிவை மேல்மூடி ஆடரவொன் றரைமேற்சாத்தி
ஊனார் தலையோட்டி லூணுகந்தான் தானுகந்த கோயிலெங்கும்
நானா விதத்தால் விரதிகள் நன்னாமமே யேத்திவாழ்த்தத்
தேனார் மலர்கொண் டடியார் அடிவணங்குந் திருநணாவே. 7

7. காடுகளில் திரியும் இயல்புடைய யானையின் தோலை உடல் மீது போர்த்து, ஆடும் அரவினைத் தமது இடையிலே கட்டி, ஊனுடன் கூடிய தலையோட்டில் பிச்சையெடுத்தலை விரும்பினவராகிய சிவபிரானாரது திருக்கோயில், தவச்சீலர்கள் நன்மை பயக்கும் திருநாமங்களைக் கொண்டு பல பல வகைகளால் துதித்துப்போற்ற, தேன் பொருந்திய மலர்களைக் கொண்டு அடியவர்கள் (இறைவரது) திருவடிகளைப் பூசிக்கும் திருநணாவாகும்.

தோலாடை, ஆடரவு, ஊனோட்டில் பிச்சை இவைகளையுடையவராயினும், இவரே விரதிகள் நன்னாமம் ஏத்தி வாழ்த்தவும், அடியார் மலர் கொண்டு அடி வணங்கவும் நின்ற முழு முதல்வர் என்பது இப்பாடலிற் போந்த கருத்தாகும்.

நானாவிதத்தால் என்பதை ஏத்திவாழ்த்த என்பதோடு கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது, அஃதாவது விரதியர்

(தவச்செல்வர்கள்) ஆடியும், பாடியும், கண்ணீர் சொரிந்தும் போன்ற பலபல வகையால் ஏத்தி வாழ்த்துகிருர்கள் என்ப தாம். நாஞுவிதத்தால் நன்ஞமம் எனக்கொண்டு எட்டு, பதி ஞென்று, நூற்றெட்டு, முன்னூறு, ஆயிரம், பதிஞயிரம் போன்ற திருநாமங்களால் ஏத்தி வாழ்த்தினர் என்றும் பொருள் உரைக்கலாம்.

இவ்வாறின்றி நாஞவிதத்தால் விரதிகள் என்றே கொண்டு "காபாலம், பாசுபதம் முதலிய விரதியர்; இவர் அகப்புறச் சமயத்தாராதலின் நாமமே ஏத்தி வாழ்த்த என்றும், அடியார் அகச்சமயத்தாராதலின் மலர் கொண்டடி வணங்கும் என்றும் அருளிஞர்" எனப்பொருள் உரைத்தார்கள் சிவகவிக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள்.

மன்னீ ரிலங்கையர்தங் கோமான் வலிதொலைய விரலாலூன்றி
முந்நீர்க் கடல்நஞ்சை யுண்டார்க் கிடம்போலு முனைசேர்சீயம்
அன்னீர் மைகுன்றி யழலால் விழிகுறைய வழியுமுன்றில்
செந்நீர் பரப்பச் சிறந்து கரியொளிக்குந் திருநணுவே. 8

8. கடல் சூழ்ந்த இலங்கையர்களின் அரசஞகிய இராவணன் வலிதொலையும்படி ஒரு திரு விரலால் ஊன்றிய வரும், பாற்கடலினின்றும் எழுந்த விஷத்தை உண்டவரு மாகிய சிவபிரானது இடம் (எதுவெனில்) கொலை செய்யும் போரின் முனையை விரும்பியடையும் சிங்கமானது (தனது முதுமையால்) போர் செய்யும் அப்பகைச் செயலின் தன்மை குறைவுபட்டு, நெருப்பைக் கக்கும் விழிப்பார்வையும் குறைவு பட்டுக்கிடக்கின்ற முற்றத்தில் இரத்தம் சிந்த, (அதனைக் கண்டு) பயமின்றி யானையானது அச்சிங்கத்தின் கண்ணில் படாமல் தன்னை ஒளித்துக் கொள்ளும் திருநணுவாகும்.

முந்நீர்க்கடல்—ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்ற மூவகை நீரைத் தன்னுள் கொண்டிருத்தலால் கடல் முந்நீர் எனப்பட்டது. இதனை மறுத்து, 'ஆனல் முந்நீர்க்குப் பொருள்

யாதோவெனின் முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பது. முச்செய்கையாவன மண்ணைப் படைத்தலும், மண்ணை அழித்தலும், மண்ணைக் காத்தலுமாம்' என்று உரை கூறினர் அடியார்க்கு நல்லார் (சிலப்பதிகார உரை காண்க).

இத்திருப்பாடலின் 2, 3, 4வது அடிகள் நுதலும் பொருள்:- சிங்கத்துக்குப் போர் முனையில் செல்லுதலும், கண்களில் தீப்பறக்க விழித்தலும் இயல்பேயாயினும், முதுமையினால் அத்தன்மைகுன்றி வலியிழந்து இரத்தம் சிந்தும் நிலையில் உள்ளது. அந்நிலையில் அவ்வழி செல்லும் யானை சிங்கத்தின் நிலை கண்டு பயம் குறைந்த போதிலும், சிங்கத்தினிடம் உள்ள இயற்கையான அச்சங்காரணமாகத் தன்னை ஒளித்துக் கொண்டே செல்லுகிறது என்பதாம். சிங்கத்தை கனவினில் கண்டாலும் கூட யானை அஞ்சும் என்பர். சிம்மசொப்பனம் எனக் கூறும் உலகவழக்கும் கருதுக.

மையார் மணிமிடறன் மங்கையோர் பங்குடையான்
மனைகடோறும்
கையார் பலியேற்ற கள்வனிடம் போலும் கழல்கள் நேடிப்
பொய்யா மறையானும் பூமி யளந்தானும் போற்றமன்னிச்
செய்யார் எரியாம் உருவ முறவணங்கும் திருநணுவே. 9

9. கருமை நிறம் பொருந்திய மணி போன்ற திருக்கழுத்தை உடையவரும், ஒரு பங்கிலே உமாதேவியாரை உடையவரும், இல்லங்கள் தோறும் கைகளில் இடப்படும் பிச்சையை ஏற்கும் கள்வனுமாகிய சிவபிரானது இடம் (எதுவெனில்) திருவடிகளையும் திருமுடியையும் தேடிச்சென்ற திருமாலும் நான்முகனும் போற்றும்படி நிலைபெற்று விளங்கிச் செம்மை நிறம் பொருந்திய எரியாம் உருவத்தை அவர்களிருவரும் நிலமுற விழுந்து வணங்கும் திருநணுவாகும்.

பலியேற்ற கள்வன்—பலியேற்பதற்காக வந்தவர் போல நடித்து அப்பலியினை இட்ட மங்கையர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தமையால் 'கள்வன்' என்று கூறினார். பொய்யா மறையான் — என்றும்பொய்யாத வாய்மை மொழியாகலின் வேதம் பொய்யாமறை எனப்பட்டது. அதனை இறைவர் பால் உபதேசம் பெற்று என்றும் ஓதுபவனாதலின் பிரமதேவன் பொய்யாமறையான் எனப்பட்டான். நேடி—தேடி; கழல்கள் நேடி எனக் கழல்களை மட்டும் குறிபிட்டாரேனும் அடிமுடி தேடிய வரலாற்று உண்மைபற்றி திருமுடியையும் நேடி எனச் சேர்த்துக் கொள்க. எரியாம் உருவம்—தீப்பிழம்பாகத் தோன்றிய வடிவம்.

ஆடை யொழித்தங் கமணே திரிந்துண்பார் அல்லல்பேசி
மூடு முருவமுகந் தார்உரை யகற்று மூர்த்திகோயில்
ஓடு நதிசேரும் நித்திலமு மொய்த்தகிலுங் கரையிற்சாரச்
சேடர் சிறந்தேத்தத் தோன்றி யொளிபெருகுந் திருநணாவே. 10

10. ஆடையுடுத்தாது நிர்வாணிகளாய்த் திரிந்து உணவு கொள்ளும் சமணர்களும், (பிறருக்கும் தமக்கும்) துன்பமே தரும் வார்த்தைளைப் பேசியும், உடல் முழுவதையும் மூடும்படி உடை போர்த்தலைவிரும்பும் பௌத்தர்களும் கூறும் வார்த்தைகளை (அவற்றால் விளையும் தீங்குகளை) நீக்கும் இறைவரது திருக்கோயில் (எதுவெனில்)[1] ஓடுகின்ற நதி அதனிற் சேருகின்ற முத்துக்களையும் அகில் கட்டைகளையும் கரையில் சேரும்படிச் செய்ய, அறிவிற் சிறந்த பெரியோர்கள் சிறந்த முறையிலே ஏத்துதல் செய்வதும், செங்காந்தள் மலர்கள் மலர்ந்து ஒளிவீசுதலுமுடைய திருநணா என்னுமித்தலமாகும் (தோன்றி-செங்காந்தள்).

இப்பாடலின் ஈற்றடிக்குச் சேடர் சிறந்து ஏத்த அதனால் மகிழ்ந்து இறைவர் அங்கு எழுந்தருளி அவரது சிவவொளி பெருகுகின்ற திருநணா என்ற ஒரு பொருளும் கொள்ளலாம்,

கல்வித் தகத்தால் திரைசூழ் கடற்காழிக் கவுணிசீரார்
நல்வித் தகத்தால் இனிதுணரு ஞானசம் பந்தனென்னும்
சொல்வித் தகத்தால் இறைவன் திருநணு ஏத்துபாடல்
வல்வித் தகத்தான் மொழிவார் பழியிலரிம் மண்ணின்மேலே. 11

திருச்சிற்றம்பலம்

11. மலை போன்று உயர்ந்த அலைகள் சூழ்ந்த கடற்காழியில் கவுணியர் குலத்தில் தோன்றியவனும், சிறப்புடைய நல்ல ஞானத்தால் அனைத்தையும் இனிதுணரும் திருஞானசம்பந்தன் கருதிய திருத்தம் மிக்க சொற்களால் இறைவர் கோயில் கொண்டருளிய திருநணு என்னுமித்தலத்தைத் துதித்துப் பாடிய இப்பாடல்களை வலிய உறுதிப்பாட்டோடு பாடுபவர்கள் இம்மண்ணுலகில் பழிகள் ஏதுமில்லாதவராவர்.

கல்வித்தகம்—கல் என்னும் சொல்லுக்கு மலை என்ற பொருளும் உண்டு. வித்தகம் - பெருமை, எனவே மலையின் பெருமை அஃதாவது மலைபோல் உயர்ந்திருத்தல் எனக் கொள்க. அலைகள் மலைபோன்று உயர்ந்து வருதலை முன்னரும் "குன்ரேங்கி வன்திரைகள் மோத" எனக் கூறியுள்ளது காண்க (இப்பதிகம் 3ம் பாடல்). கல்வித்தகத்தால் என்பதற்குக் கல்வித் தகத்து எனக்கொண்டு, அரிய நூல்களைக் கற்ற ஞானம் நிரம்பிய மக்களை உடையது என்றும் கொள்ளலாம். (ஆல் - ஆசை) திரு. பி. மா. சோ. அவர்கள் உதவிய குறிப்பு.

நல்வித்தகம்—நல்ல ஞானம். அஃதாவது உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம். இவ்வரிய சிவ ஞானத்தைப் பெற்றமையால் அனைத்தையும் அறியும் முற்றறிவு உடையவராக ஆனுர் என்பது கருத்து.

சொல்வித்தகம்:—சொற்களின் திறம். அதாவது திறம் உடைய சொற்கள். வித்தகச் சொல்லால் என மாற்றி உரை கொள்ளப்பட்டது. வல்வித்தகத்தான் —'ஆன்' உருபு 'ஓடு',ப்

பொருளில் வந்ததாகக் கொண்டு வலிய வித்தகத்தோடு ஓதுவார் எனப் பொருள் உரைக்கப் பட்டது. வித்தகம்—சாமர்த்தியம், மனஉறுதிப்பாடு குறித்தது. பல திருப்பதிகக் கடைக்காப்புப் பாடல்களில் பாடவல்லார் என்று அருளியிருத்தலும் இங்குக் கருதுதற்குரியது. பழி—நிந்தை, குற்றம்.

தலவரலாறு:—கொங்கு நாட்டில் பாடல் பெற்ற திருப்பதிகள் ஏழனுள் திருநணு மூன்ருவது தலமாகும். வழிபடுவோருக்கு யாதொரு தீங்கும் நண்ணுத தலம் என்ற காரணத்தால் நண்ணுவூர் அல்லது அல்லது நணு எனப்பட்டு, தெய்வத்தன்மைக்குரிய 'திரு' என்னும் அடைமொழி சேர்த்து திருநணு ஆயிற்று. பவாநி நதியும் காவிரி நதியும் கூடுவதால் பவாநிகூடல் என்றும், பராசரமுனிவர் அமிர்த குடம் வைத்திருந்த இடத்திலிருந்து அகழ்ந்தெடுத்த குழியினின்றும் உற்பத்தியாகிய அமுதநதியும் கூடுவதால் பவாநி முக்கூடல் என்றும் வழங்கப்படுகிறது. தலமரம் இலந்தையாதலால் பதரிவனம் என்றும் பெயர் கூறப்படுகிறது. குபேரன், விசுவாமித்திர மஹரிஷி, பராசரமுனிவர் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். இத்தலத்தில் திருமால் சிவபெருமானை வழிபட்டதன் நினைவாகக் கோயிலுள் ஆதிகேசவப் பெருமாள் சந்நதியும் தனியே உள்ளது. "பூமியளந்தானும் போற்ற மன்னி......" என்ற இத்தலத் திருப்பதிகம் 9ம் பாடல் இச்செய்தியைக் குறிப்பதாகும். திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம் ஒன்றுமட்டுமே இத்தலத்துக்கு உள்ளது. இது ஈரோடு நிலயத்தினின்றும் வடமேற்கே சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவர் திருப்பெயர்—சங்கமுகநாதர்; இறைவியார் திருப்பெயர்—வேதநாயகி அம்மை: தலவிருட்சம்—இலந்தை.

சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

திருநீலகண்டத் திருப்பதிகம்

(திருக்கொடிமாடச்செங்குன்றூரில் அருளியது)

பதிகவரலாறு:—திருஞானசம்பந்தப் பெருமான் திருநணு வில் சங்கமுகநாதரை வணங்கிப் பதிகம் பாடித் துதித்து மீண்டும் திருக்கொடிமாடச்செங்குன்றூர் வந்து அங்குத் தங்கி யிருந்த காலத்தில் பனிக்காலம் வந்தணைய, அதனால் குளிர் சுரம் பரவி மக்களைப் பெரிதும் வருத்தியது. திருஞான சம்பந்தப் பிள்ளையாருடன் உறையும் பரிசனங்களையும் அந் நாட்டில் அவர்கள் பயின்ற காரணத்தால் அக்குளிர்சுரம் பற்றியது. இச்செய்தியினை பிள்ளையாருக்கு விண்ணப்பித்து அடியார்கள் இறைஞ்சினார்கள். உடனே பிள்ளையார் சிவ பிரானது திருவருளைத் தொழுது "இந்நிலத்தின் இயல்பு எனினும் நமக்கெய்தப்பெரு" என்று "அவ்வினைக்கிவ்வினை" என்றெடுத்து "ஐயர் அமுது செய்த வெவ்விடம் முன் தடுத்து எம்மிடர் நீக்கிய வெற்றியினால் எவ்விடத்தும் அடியார் இடர் காப்பது கண்டம்" என்றே "செய்வினை தீண்டப்பெரு திருநீல கண்டம்" என்று திருப்பதிகம் 'பாடியருளினார். அப்பதிகத் தினில் "தீண்டப்பெரு திருநீலகண்டம்" என்ற குறிப்பினால் ஆணை நிகழ அருள் செய்து தூயதிருப்பதிகத் திருக்கடைக் காப்பு தொடுத்தணைய, அப்பொற்பதி வாழ்பவர்க்கேயன்றி மேவும் அந்நாள் அத்தீய பனிப்பிணி அந்நாடு முழுவதும் நீங்கியது.

இன்றும் இப்பதிகத்தைப் பக்தியுடன் பாராயணஞ் செய்து வந்தால் சுரம் முதலிய பிணிகள் நம்மை நலியா என்பது ஆன்றோர் அனுபவத்தில் கண்ட உண்மை. [இப்பதிகத்தின் ஏழாவது திருப்பாடல் கிடைக்கவில்லை. சிதலரித்து மறைந்த வற்றுள் இதுவும் ஒன்று போலும்—ஆசிரியர்].

பண்-வியாழக்குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 1

பதிகப் பொழிப்புரை :—(1) முற்பிறவிகளில் செய்த தீவினைக்கேற்ப இப்பிறவியில் இத்துன்பம் அனுபவிக்கின்றோம் என்று கூறுகின்ற அம்மொழியை மட்டும் அறிந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அவ்வினையினின்றும் நீங்கி உய்தி பெறும் வழியை நாடாதிருப்பது உங்களுக்குக் குற்றம் அல்லவா? அடியார்களாகிய நாம் கையாற்செய்யப்படும் சிவத்தொண்டுகளைச் செய்து எம்பெருமானின் திருவடிகளை வணங்குவோம். (அங்ஙனஞ் செய்தால்) நாம் செய்த வினை நம்மை வந்து தீண்டாது. இதற்குத் திருநீலகண்டத்தின் மீது ஆணை. (அஃதாவது தீண்டப் பெருமை திருநீலகண்டத்தின் ஆணையால் நிகழ்வது என்பதாம்).

அவ்வினைக்கிவ்வினை—துன்பத்தையனுபவிக்கும் மக்கள் 'இது நான் போன ஜன்மத்தில் செய்த கர்மபலன், என் தலைவிதி' என்று சாதாரணமாகக் கூறும் வார்த்தை. உய்வினை—உய்திபெறும் வழியை. கைவினை—சரியை கிரியை முதலிய தொண்டுகள். திருநீலகண்டம்—இது ஆணையிட்டதன் குறிப்பு "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று திருநீலகண்ட நாயனாரின் மனைவியார் ஆணையிட்டதும் இங்கே கருதுக.

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 2

2. சிவார்ப்பணமாக நந்தவனங்கள் அமைத்தும் குளங்கள் பலவற்றைத் தோண்டியும், மற்றும் அன்பு கனிகின்ற

மனத்தோடு, அம்பினை எய்த செய்கையால் மதில்கள் மூன்றையுமெரித்த பிரானே என்று பகல் இரவு ஆகிய இரு காலங்களிலும் துதித்துப் பூக்களைக் கொய்து பெருமானின் மலரடிகளில் சாத்தி அடியவர்களாகிய நாம் வணங்குவோம். ஆதலால் தீவினை வந்தெம்மைத் தீண்டப்பெரு. இதற்குத் திருநீலகண்டத்தின் மீது ஆணை.

இத்திருப்பாடல் முன்பாடலில் கூறிய கைவினை என்பதன் விளக்கமாக அமைந்துள்ளது.

முலைத்தட மூழ்கிய போகங் களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டும் மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். 3

3. பெண் போகமும் மற்றுமுள்ள புலன் வழி நுகரும் ஏனைய உலகியல் இன்பங்கள் அனைத்தும் எம்மை இளைக்கச் செய்து துன்புறுத்தாவாறு எம்மீது இரக்கங்கொண்டு எம்மை ஆட்கொண்ட விரிசடைப் பெருமானே! இலை போன்ற நுனியுடைய சூலமும், தண்டாயுதமும் மழுவும் போன்ற படைக் கலன்களைக் கொண்டவரே! ஆரவாரித்துக் கொண்டு வரும் தீவினை எம்மைத் தீண்டப்பெரு. இதற்குத் திருநீலகண்டத் தின்மீது ஆணை.

விலைத்து—விலையாக உயிர்களிடமிருந்து பெறும் விலையை யுடையன என்றும் பொருள் கூறலாம். அஃதாவது அப் போகங்கள் உயிர்களுக்கு வினைக்கீடாக அதன் பயனாகிய துன்பத்தைத் தருவன என்பதாம்.

எம்மை ஆண்ட விரிசடையீர்—திருஞானசம்பந்த சுவாமி கள் உலக இன்பங்கள் துய்த்து வினைவயப்படாது மூன்றுவது வயதிலேயே இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற சரிதக் குறிப்பு. சிலைத்து—சினந்து, முழங்கி, ஆரவாரித்து. தீவினை சிலைத்து எம்மை தீண்டப்பெரு—பாவ வினைகள் வெகுண்டு

எம்மைப் பற்றி வருத்தும் ஆற்றல் பெரு என்பதாம். இவ்வா றின்றி, இவ்வினைகள் சிலேத்து (தளர்ந்து) அதனால் வலியில வாகி எம்மைத் தீண்டப்பெரு எனினும் அமையும். அவை வலியிழத்தற்கும் ஆணையே காரணம் என்று கொள்க.

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். 4

4. விண்ணுலகத்தை ஆள்கின்ற வித்தியாதரர்களாலும் (இங்குத் தேவர்கள் என்ற பொதுமையைக் குறித்தது), பூவுலகத்தில் உள்ள மறைவல்லவர்களாலும் "புண்ணியப் பயனாகிய பெருமான்'' என்று பகல் இரவு ஆகிய இருகாலங் களிலும் தொழுது வணங்கப்படுகின்ற புண்ணியமூர்த்தியே! இமையாக் கண்கள் மூன்றுடைய பிரானே! உமது திருவடி களைச் சரணடைந்தோம். ஆகவே வலிமை மிக்க தீவினைகள் வந்து எம்மைத் தீண்டமாட்டா. இதற்குத் திருநீலகண்டத் தின் மீது ஆணை.

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந்
தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். 5

5. ஒப்பில்லா மலைபோலத் திரண்ட திண்மையான தோள்களுடைய பெருமானே! தாங்கள் எம்மை வலிந்து ஆட் கொண்டருளிய பின்னர் எமது குறைகளைக் கேளாது போவதும் தங்கட்குப் பெருமை ஆகுமோ? சொல்லப்படுகின்ற துணைகளை உடைய இவ்வுலக வாழ்வைத் துறந்தும் தேவரீரது திருவடி களையே புகலாக அடைந்தோம். எனவே எம்மை வருத்தித் துன்பமுண்டாக்கும் தீவினைகள் எம்மைத் தீண்டும் வலியற்ற வையாம். இதற்குத் திருநீலகண்டத்தின் மீது ஆணை.

மலைபோலத் திரண்ட தோளுடைய பிரான் ஆதலின் வருத்தவரும் தீவினைகளை எளிதில் வலியிழக்கச் செய்வர் என்பது கருத்து. கிற்று—ஆற்றலால். இத்திருப்பாடலின் இரண்டாவது அடி நுதலும் பொருள் யாதெனின் இறைவர் வலிய வந்து ஆட்கொண்ட தன்மையாலே அவரே வந்து நம் குறைகளைக் களையவேண்டியிருக்க, முறையிட்டும் கேளா திருத்தல் கருணைக் கடலாகிய அவர்க்குப் பெருமையாகுமோ என்று விண்ணப்பித்ததாம்.

சொற்றுணை வாழ்க்கை—அகப்பற்றுகள், புறப்பற்றுகள் ஆகியவைகளோடியைந்த இல்வாழ்க்கை. 'சொல்லளவிலே கழியும் வாழ்க்கை' என்பர் சிவக்கவிமணியவர்கள்.

மறக்கு மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். 6-7

6-7. உம்மை அவ்வப்போது மறக்கும் இயல்புடைய மனத்தினை அங்ஙனம் மறவாவண்ணம் செய்து, எமது உயிரை வற்புறுத்திப் பிறப்பிலிப் பெருமானாகிய தேவரீரது திருத்தமுடைய திருவடிகளின் கீழ்ச் சிறிதும் பிழையாத வண்ணம் அப்போதே கொய்த மலர்களைக் கொண்டு வந்து அடியவர்களாகிய நாங்கள் உம்மைப் பூசிக்கும் பணியுடைய வராக உள்ளேரம். எனவே சிறப்புகளையெல்லாம் இல்லை யாகச் செய்யும் தீவினைகள் வந்து எம்மைத் தீண்டமாட்டா. இதற்குத் திருநீலகண்டத்தின் மீது ஆணை.

'பிறப்பில் பெருமான்'—தாம் பிறப்பற்றவராக இருப்ப தோடு தம்மடியார்க்கும் பிறப்பை இல்லையாகச் செய்யும் பெருமான்.

திருவடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்—குறைகள், அதாவது அபசாரம் நேராதபடி என்பதாம். திருவடிப் பிழைத்தல் என்பது சிவாபசாரத்தைக் குறிக்கும்.

பறித்தமலர்—இது தாமே பறித்தமலர் என்றும், அவ்வப் போது பறித்தமலர் என்றும் இருவகைப் பொருள்தரும். பிறர் பறித்துக் கொடுத்த மலர்கொடு பூசித்தல் அத்துணைச் சிறப்புடையதன்று. "உண்பதன் முன் மலர் பறித்திட்டு உண்ணாராகில்" என்று அப்பரடிகளும் பறித்து இடவேண்டு மென்று வற்புறுத்தியதும் இங்குக் கொள்க.

சிறப்பிலித்தீவினை—சிறப்பில்லாததீவினை - சிறப்புக்களை இல்லையாகச் செய்யும் தீவினை. சிறப்பு+இல்+இத்தீவினை.

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும் நாமடியோம்
செருவில் அரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 8

8. இனிப் பிறவிக்கு வித்தாகும் வினைகளைச் சேரவொட்டாது விலக்கி, இல்வாழ்க்கையை வெறுத்து, உமது திருவடிக்கே மனம் உருகி மலர்கொண்டு அடியார்களாகிய நாங்கள் உம்மை வழிபடுவோம். தன்னை எதிர்த்துப் போரிடுவார் எவருமின்றிச் செருக்குற்றிருந்த அரக்கனாகிய இராவணனைப் பெருமையுடன் நெருக்கிப் பின் அவனுக்கு அருளும் புரிந்த பெருமானே! உம்மை வழிபடுதலில் மனஞ்செலுத்தும் திருவை இல்லாதபடிச் செய்யக் கூடிய தீவினைகள் வந்து எம்மைத் தீண்டப்பெறா. இதற்குத் திருநீலகண்டத்தின் மீது ஆணை.

கரு—முன்வினை காரணமாக ஏற்பட்ட இப்பிறவியில் மேல் வரக்கடவதாகிய ஆகாமிய வினைகளைக் குறித்தது. சஞ்சிதத்தின் எஞ்சிய பகுதியுமாம்.

கருவைக் கழித்து என்பதற்குக் கருவில் தங்கியிருந்த போது பட்டதுன்பத்தைக் கழித்து எனக்கொள்ளலுமாம். சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கும் ஜீவன் இறைவனைச் சரணமடைந்து, "சம்போ! மஹாதேவா! இக்கருவில் நான் அனுபவித்த துன்பம் இனியும் அனுபவிக்கக் கூடாது; எனவே கருவிலிருந்து வெளிப்பட்ட பின் உம்மை வழிபட்டு

மீண்டும் கருவில் புகாதவாறு அருள் பெறுவேன் என்று நினைக்குமென்றும், பிறந்த பின் அதனை மறந்து மாயையில் சிக்கி மீண்டும் பிறத்தற்கேதுவாகிய வினைகளையே ஈட்டும் என்றும் நூல்கள் கூறுகின்றனவென்பது இங்குக் கருதற்குரியது. எனவே மேலும் வினைகள் வந்தடையாவண்ணம் இறைவனுடைய திருவடிக்கே மனம் வைத்து வழிபடுவோம் என்பது முதலிரண்டடிகளின் கருத்தாகக் கொள்க.

செருவில் அரக்கன்—இராவணன் திக்விஜயம் செய்து அனைவரையும் வென்றவனாகலின் இனி அவனுக்கு எதிராகப் போர் செய்வார் எவருமிலர் என்ற குறிப்பு. அவனைச் சீரிலடர்த்தல் என்பது அத்தகைய வலிமைமிக்க அவ்வரக்கனைத் தமது ஒரு கால்விரலினால் அடர்த்து அவன் சிரங்களும் தோள்களும் நெரியுமாறு செய்த இறைவரது வரம்பில்லாத ஆற்றலுடைமையைக் குறித்தது. சீரில் அருள்செய்தவரே என்றும் கூட்டி, பேரபராதியான அவனையும், அவன் தனது பிழையை உணர்ந்து சரணடைந்தமையால் பிழை பொறுத்து அவனுக்குப் பேரருள் புரிந்தவர் என்று இறைவரது கருணையின் பெருமையைப் போற்றியதாகவும் கொள்ளலாம். இப்பெருமையைத் தெய்வப் புலமைச் சேக்கிழாரடிகள் பின் வருமாறு விளக்கியருளுதல் காண்க.

''மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பாடருள் செய்தார்''

—திருஞானசம்பந்தநாயனார் புராணம், 77.

திருவிலித் தீவினை:—சிவனடிமைத் திறத்தில் ஆளாவதே உண்மையான திருவாகும். அங்ஙனம் ஆளாகா வண்ணம் தடுத்தலால் தீவினையானது திருவிலி எனப்பட்டது. திருவினை இல்லையாகச் செய்யும் தீவினை என்பதாம். திருப்பைஞ்ஞீலித் திருப்பதிகம், 2வது பாடலில் ''உருவிலான் பெருமையை உளங்கொளாத அத்திருவிலார்......'' என்று அருளிச் செய்த

தையும் இங்குக் கொள்க. (பக்கம் 37 காண்க.) திரு—முக்தி யாகிய செல்வம் என்றும் அதனையடையாதபடி மீண்டும் பிறவியில் வீழ்த்தலால் தீவினையானது திருவிலித் தீவினை எனக் கூறப்பட்டதாகவும் கொள்ளலாம்.

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். 9

9. தாமரை மலர்மேல் உறையும் பிரமனும் திருமாலும் தமக்குள் எவர்பெரியவரென்று வாதுசெய்து பூசலிட்டபொழுது (அவர்கள் முன்) அழற்றூணாகத் தோன்றிய உமது திருமுடியையும் திருவடியையும் காண்போம் என்று தொடர்ந்து சென்றும் காண்பதற்கரியவராகத் திகழ்ந்த பிரானே! உமது திருவகுளைப் பெறவியலாது பன்முறை தளர்ச்சியடைந்தும் மேன்மேலும் தளர்ந்தாலும் உமது திருவடிகளை விடாது பற்றி அடியோமாகிய யாம் தொழுது வணங்குவோம். எனவே சீற்றம் மிக்க தீவினைகள் எம்மைத் தீண்டப்பெரு. இதற்குத் திருநீலகண்டத்தின் மீது ஆணை,

நான்முகன் நாராயணன் ...... அடியும் முடியும் - எதிர் நிரனிரையாக முடியும் அடியும் என்று கொள்க.

தோற்றினும் தோற்றும் என்பதற்கு 'வினைகள் தோற்றுவிக்கும் காரணத்தால் நாங்கள் மீண்டும் பிறக்கவும் நேரும். அம்மாதிரி நேராவண்ணம் அடியோம் உம்மைத் தொழுது வணங்குகின்ருேம்' எனவும் கொள்ளலாம்.

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்ருேம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். 10

10. கனிமவினை காரணமாகச் சிலர் பௌத்தர்களாகப் பிறந்தும், அதே போலச் சிலர் சமணர்களாகி ஆடையொழித்து நிர்வாணிகளாகத் திரிந்தும், அவம் செய்து, நல்ல தவத்தைச் செய்து பெறும் புண்ணியப் பேறு இன்றி இம்மை மறுமை எனப்படும் இருவகையான இன்பங்களையும் அவற்றின்மீது பற்றினையும் விட்டொழித்தவர்களானார்கள். மணங்கமழும் கொன்றைப் பூக்களைச் சூடிய சடைமுடியையுடைய பெருமானே! நாங்கள் உமது திருவடிகளைப் போற்றுகின்றோம். எனவே தீக்குழி போன்று கனலுவதாகிய கொடிய நரகத்தில் வீழ்த்தும் தீவினைகள் வந்து எம்மைத் தீண்டப்பெறா. இதற்குத் திருநீலகண்டத்தின் மீது ஆணை.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் பெண்ணின்பமே பேரின்பம் எனக் கொள்ளும் உலகாயதர்கள் இம்மையின்பம் ஒன்றினையாவது பெறுகிறார்கள். அவர்கள் தவம் என்பதொன்றும் அறியாதவர். ஆனால் தவம் என்று கருதி அவம் செய்யும் சமண சாக்கியர்களோவெனில் தங்கள் உடலை வருத்துதல், பெண்களை வெறுத்தல் போன்ற செயல்களால் இம்மையின்பத்தையும், தவறான கடவுட் கொள்கையால் மறுமை இன்பத்தையும் ஒருங்கே இழக்கின்றார்கள். இதற்குக் காரணம் அவர்கட்குப் புண்ணியப் பேறின்மையே யாகும். சிவபெருமானை வணங்கும் புண்ணியப் பேறு பெற்றவர்களோவெனில் அவனதருளாலே இருவகையான இன்பங்களையும் பெறுகிறார்கள். இதற்குத் தடையாக நிற்கும் தீவினைகள் உளவேல் திருநீலகண்டத்தின் ஆணையால் அவை அடியார்களைத் தாக்கமாட்டா எனச் சுவாமிகள் ஆணையிட்டருளியது கண்டு கொள்க.

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பெறுதற்கரியதான இந்த மானிடப் பிறவியில் எம் செல்வனாகிய சிவபிரானின் திருவடிகளையடையச் சிவ நெறியைப் பேணியும் அன்றி அப்பிறவியைக் கடந்து மீண்டும் பிறவியுண்டாகுமேல் அப்பிறவியிலும் பெருமானின் திருவடிகளையே கூடும் பொருட்டுத் தேவதேவனாகிய நமது பெருமானின் திருவடிகளில் உறுதியுடன் பயிலும் திருஞானசம்பந்தன் பாடிய செம்மை நெறி சேர்க்கும் தமிழ்ப் பாடல்களாகிய இப்பத்தினையும் பாடவல்லவர்கள் இன்பம் நிறைந்த சிவலோகத்தில் அந்த மஹாதேவனுடன் கூடியிருப்பார்கள்.

இத்திருப்பாடலின் முதலடியை 'எம்செல்வன் கழலடைவான் பிறந்த பிறவியில் பேணி' என்று மாற்றியும் பொருள் கொள்ளலாம். அஃதாவது பெறுதற்கரியதான பிறவி கிடைத்தது இறைவனடி கூடுதற்கேயாம் என்பது கருத்து.

செல்வன்—'ஸர்வைச்வர்ய ஸம்பன்னன்' என்று உபநிடதங்கள் இறைவரைப் போற்றுகின்றன என்ற குறிப்பு.

இமையவர்கோன், வானவர்கோன் என்பன மஹாதேவன் என்ற சிவபிரானது திருநாமத்துக்கு உரிய விளக்கங்களாக அமைந்துள்ளன. இறைவர் திருவடியில் கூடுதலே இப்பதிகப் பயன் என்று சுவாமிகள் கூறியருளியது தெளிக.

இறைவர் இறைவியார் திருப்பெயர், தலவரலாறு முதலியன திருக்கொடிமாடச் செங்குன்றூர் தலப்பதிக உரையின் இறுதியில் உள்ளவை காண்க. (பக்கம், 63-65)



சிவம்,

கைவசமுள்ள சில அரிய பிரசுரங்கள்

1	ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் திவ்யசரித ஸங்க்ரஹம்	ரூ. 4-00
2	காரியசித்திதரும் கணபதி ஸ்தோத்ரம்	0-80
3	சிவஞான பூஜாமலர்—1981	5-50
4	ஷை 1982	6-50
5	ஷை 1983-84	10-00
6	ஷை 1985	12-00
7	ஷை 1987-88	12-00
8	சிதம்பரம் ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்	11-00
9	தில்லைத் திருநடனம்	3-50
10	மூவர் தமிழ்மாலை 1—18	40-00
11	ஷை 19, 20, 21, 22	16-00
12	வைத்தீசுவரன் கோவில்	2-50
13	மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள் திவ்ய சரித ஸங்க்ரஹம்	6-00
14	ஸ்ரீ ருத்ர ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்	15-00
15	ஸ்ரீ சங்கரஜயந்தி மலர்—1980	6-00
16	ஸ்ரீ சங்கரஜயந்தி வெள்ளிவிழா மலர்	20-00
17	The Story of Jagadguru Sri Adi Sankara Bhagavatpada	3-00
18	ஸ்ரீராமாயண தாத்பர்ய ஸங்க்ரஹஸ்தோத்ரம், ஸ்ரீபாரத தாத்பர்யஸங்க்ரஹஸ்தோத்ரம்	3-00
19	சிவபரத்துவமாட்சிமை அல்லது தக்ஷகாண்டம்	15-00
20	சேக்கிழார் பெரியபுராண ஆராய்ச்சி	3-00
21	ஸ்ரீசம்புநடனம் (ஸ்ரீநடேசாஷ்டகம்)	2-00

இவை அனைத்தையும் ஒரே சமயத்தில் வாங்கினால் தபால் செலவு இலவசம், சலுகையும் உண்டு. விபரத்திற்கு எழுதுக.

பதிப்பாசிரியர் :

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

43, 7-வது அவென்யூ, அசோகநகர்,

சென்னை-600 083.

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது.

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்



யத்யத் கர்ம கரோமி

தத்ததகிலம்

சம்போ தவாராதனம்

உ

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

எமையாளும் ஈசன் செயல்

1. மூவர் தமிழ்மாலை வரிசையில் 22வது தமிழ் மாலை வந்து பலநாட்களுக்குப் பிறகு 23வது தமிழ்மாலை வெளி வருகிறது. இனியாவது விரைவில் மாலைகள் வெளிவர இறைவர் திருவருளை வேண்டுகிறோம்.

2. 23வது தமிழ்மாலைப் பணியைத் தொடங்கும் பொழுது 6-12-90ல் நிறைவுறுமென எண்ணினோம். ஆனால் பணி 13-1-1991ல் தான் நிறைவுறுகிறது.

3. 1-1-1991 முதல் 5, டெலிபோஸ்ட் காலனி, குறுக்குத்தெரு, மேற்குமாம்பலம், சென்னை-33 என்ற இல்லத்திலிருந்து வேறு இல்லத்திற்கு மாறும்படியான அவசியம் ஏற்பட்டதால் அங்ஙனமே மாறியுள்ளோம். புதிய முகவரி கீழே கொடுத்துள்ளோம்.

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

43, 7வது அவென்யூ,

அசோக நகர், சென்னை-600 083.

அன்பர்கள் இந்தப் புதிய முகவரிக்கு இனி தங்கள் கடிதங்களை எழுத வேண்டுகிறோம்.

—ஆசிரியர்